Registered as a Newspaper

வாடிக்கையாளரின் நன்மை கருதி
இடம் மாற்றம் செய்யப்பட்டுள்ளது
வி.ரி. அன் சன்ஸ்
பல்வைத்தியரும்
கண் பரிசோதகரும்
317, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(B.M.Cக்கு அருகாமையில்)
முகாமையாளர்: Dr. றெஜி சொலமன்

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை ரூ. 1-50

Address being changed
to the facilities of
our customers.
V.T & SONS
QUALIFIED OPTICIANS
and DENTIST
317, CLOCK TOWER ROAD, JAFFNA.
(ADJOINING B.M.C)
Manager: Dr. REGI SOLAMAN

சுடர்: 3 யாழ்ப்பாணம் பிரபவ ஸு பங்குனி மீ 07 உ ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1408ஷஃபான் பிறை 1 (20 - 03 - 1988) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர்:32

# காவலில் உள்ளோர் குடும்பங்களுக்கு நிவாரணம்

## அரச அதிபர் விவரம் திரட்டுகிறார்

யாழ்ப்பாணம், மார்ச் 20

ஸ்ரீலங்கா பாதுகாப்புப் படைகளாலும், இந்திய அமைதிப் படையினராலும் கைது செய்யப்பட்டு, தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருப்போரின் குடும்பங்களுக்கு நிவாரண உதவிகள் வழங்கப்படும்.

இதன் பொருட்டு யாழ். அரச அதிபர் தடுப்புக்காவலில் உள்ளோர் விவரம், அவர்களின் பராமரிப்பில் தங்கி இருக்கும் குடும்பத்தினரின் விவரம் என்பவற்றைச் சேகரித்து வருகிறார்.

கைதாகித் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளவர்களின் பராமரிப்பில் தங்கியுள்ளவர்கள் பற்றிய முழு விவரங்களையும் யாழ்ப்பாணம் மாவட்ட அரச அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் இப்போது திரட்டி வருகின்றார்.

ஸ்ரீலங்கா பாதுகாப்புப் படைகள், இந்திய அமைதிப்படை ஆகியவற்றினால் கைது செய்யப்பட்டு காவலில் உள்ளவர்கள் சம்பந்தப்பட்ட சகலவிவரங்களும் சேகரிக்கப்படுகின்றன.

காவலில் உள்ளவரின் பெயர், விலாசம், கைதான திகதி, அவரின் உழைப்பில் தங்கி இருப்பவர்களின் எண்ணிக்கை, பெயர், விலாசங்கள், கைதானவருக்கும் அவரில் தங்கியிருப்பவருக்கும் உள்ள உறவு முறை போன்ற சகல விவரங்களையும் சம்பந்தப்பட்டவர்கள் அந்த அந்தப் பகுதி கிராமசேவையாளர் ஊடாக பிரதேச உதவி அரச அதிபர்மூலம் யாழ் அரச அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

கைதாகி தடுப்புக்காவலில் உள்ளவர்களின் குடும்பங்களுக்கு நிவாரண உதவி வழங்குவதற்காகவே இவ்விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-எ)

## இன்றைய மின்தடை

யாழ்ப்பாணப் பிரதேசத்தின் சகல மின் அத்தியட்சகர் பிரிவுகளிலும் இன்று காலை 8 மணி முதல் மாலை 4 மணிவரை மின்தடை ஏற்படும்.

சுன்னாகம் மின்சார நிலையத்தில் திருத்த வேலைகள் காரணமாகவே இந்த மின்தடை ஏற்படுகிறது.

## ஸ்ரீலங்கா இராணுவம் கிழக்கில் உடன் சேவையில்

### காமினி ஊர்ஜிதம்

கொழும்பு, மார்ச் 20

கிழக்கில் வாழும் சிங்கள மக்களுக்கு பாதுகாப்பு வழங்கும் பொருட்டு ஸ்ரீலங்கா இராணுவம் உடனடியாகச் சேவையில் இறங்கும்.

விசேடமாக திருமலையில் எமது படைகள் பாதுகாப்பு வழங்கும்

புதுடில்லியில் இருந்து கொழும்பு திரும்பிய பின்னர் காணி அமைச்சர் காமினி திஸநாயக்கா முன்கண்டவாறு சொன்னார்.

''கிழக்கு சிங்கள மக்களுக்கு ஸ்ரீலங்கா இராணுவம் பாதுகாப்பு வழங்கும்'' என்று 18ஆம் திகதி உதயனின் தலைப்புச் செய்தியை ஊர்ஜிதம் செய்வதாக அமைச்சர் காமினியின் இந்தத் தகவல் அமைந்துள்ளது.

அமைச்சர் மேலும் சொன்னதாவது:

இந்திய விஜயம் வெற்றிகரமாக முடிவடைந்தது. இலங்கையின் இராணுவமும் ஏனைய பாதுகாப்புப் பிரிவுகளும் கிழக்கு மாகாண மக்களுக்குப் பாதுகாப்பு வழங்குவதில் உடனடியாக இறங்கும்.

இது சம்பந்தமாக தரைச் செயல்பாடுகளை இரு நாடுகளின் இராணுவத் தலைவர்களும் கூடிப் பேசித் தீர்மானிப்பார்கள்.

இப்படி அமைச்சர் காமினி திஸநாயக்கா சொன்னார்.

புதுடில்லியில் செய்தியாளருக்கு அளித்த பேட்டியில் அமைச்சர் காமினி திஸநாயக்கா சொன்னதாவது:

இந்திய அமைதிப் படையுடன் இணைந்து கிழக்கு மாகாணத்தில் இலங்கை இராணுவம் செயற்படும் ஊர்காவல்

(6ஆம் பக்கம் பார்க்க)

## வெசாக்குக்கு முதல் நாட்டில் அமைதிவரும் அமைச்சர் சொல்கிறார்

கொழும்பு, மார்ச் 20

வெசாக் தினத்துக்கு முதல் நாட்டில் அமைதி திரும்பும் என்று கல்விச் சேவைகள் அமைச்சர் லயனல் ஜயதிலக சொன்னார்.

எஹலிய கொடவில் நடந்த கூட்டம் ஒன்றில் பேசுகையில் அமைச்சர் இந்த நம்பிக்கையை வெளியிட்டார்.

வெளிநாட்டார் எம்மை ஆண்ட போது தமிழர் விசேட சலுகைகளையும் உயர் அந்தஸ்தையும் வகித்தனர். சிங்களம் மட்டும் சட்டம் வந்த பின்னர் தான் தமிழர் தங்கள் உரிமை கோரிப் போராட ஆரம்பித்தனர்.

இப்படி அமைச்சர் லயனல் ஜயதிலக சொன்னார். (எ)

## கடைசித் திகதி 31 ஆகும்

கொழும்பு, மார்ச் 20

வெளிவாரி பி ஏ, பி. எஸ். ஸி பட்டப் படிப்புப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் கடைசித் திகதி இம் மாதம் 31ஆம் திகதி என்று பேராதனை பல்கலைக்கழகம் அறிவித்து உள்ளது.

முன்னர் விண்ணப்பிக்கும் கடைசித் திகதி இம் மாதம் 18 ஆம் திகதி என்று அறிவிக்கப்பட்டு இருந்தது. (ஓ-எ)

## 5 ஆம் நாளாக கடைகள் மூடப்பட்டிருந்தன

யாழ்ப்பாணம், மார்ச்20

யாழ்ப்பாணத்தில் நேற்றுத் தொடர்ந்தும் ஐந்தாவது நாளாக கடைகள் மூடப்பட்டிருந்தன.

## பரீட்சை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், மார்ச்20

யாழ் சைவ பரிபாலன சபையினரால் பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தப்பட இருந்த சைவசமய பாடப் பரீட்சை எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இப் பரீட்சை இன்று நடைபெறுவதாக இருந்தது [ஓ]

## நயினாதீவுபடகுச்சேவை நாளை முதல் சீராகும்

யாழ்ப்பாணம்,மார்ச் 20

நயினாதீவு படகுச் சேவை நாளைமுதல் மட்டுப்படுத்தப்படாதமுறையில் இடம்பெறும்.

யாழ் அரச அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் எடுத்துக்கொண்ட முயற்சி காரணமாக இது சாத்தியமாகியுள்ளது.

முன்னர் மட்டுப்படுத்தப்பட்ட சேவையே இடம்பெற்று வந்தது. இது பயணிகளுக்குப் பெருத்த சிரமத்தைக் கொடுத்தது.

சம்பந்தப்பட்டவர்கள் கொழும்பு கூட்டுப் படைத் தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொண்டனர்.

திங்கள் முதல் வெள்ளி வரை காலை 7-30 மணி முதல் மாலை 4 மணி வரையும்.

சனி, ஞாயிறு தினங்களில் காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரையும் படகுச்சேவை இடம்பெறும்.

இதற்கான நேரசூசி ஒன்றும் தயாரிக்கப்பட்டுள்ளது

நாளைமுதல் இந்த நேரசூசியின்படி படகுச் சேவை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ எ)

வன்செயலால்

## சுபநேரம்

20-03-1988
பங்குனி 7
ஞாயிற்றுக்கிழமை
சுபநேரம்:
9.18 முதல் 10.48 வரை
ராகுகாலம்:
4.48 முதல் 6.18 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.
சௌபாக்கிய கௌரி விரதம்

## துணுக்காய், தருமபுரம் பகுதிகளில் தேடுதல்

யாழ்ப்பாணம் மார்ச் 20

கிளிநொச்சி துணுக்காய், தருமபுரம் பகுதிகளில் இந்திய அமைதிப் படையினர் பெரும் தேடுதல் நடவடிக்கையை மேற் கொண்டு வருகின்றனர்.

பத்தாயிரத்துக்கும் அதிகமான படையினர் இப்பகுதியில் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாகச் சொல்லப்படுகிறது.

தினமும் சில பகுதிகளில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களும், குண்டு வெடிப்புகளும் நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இத் தேடுதல் நடவடிக்கையையடுத்து இப்பகுதி மக்கள் பெரிதும் பதற்றமடைந்துள்ளனர்

தேடுதலின் போது கைது செய்யப்பட்டோர் பற்றிய விவரமோ அல்லது வேறுவிவரமோ இச்செய்தி எழுதப்படும் வரை தெரியவரவில்லை. [ஓ-10]

## ஸ்கந்தபுரம் பகுதியில் இருவர் சூட்டுக்குப் பலி

யாழ்ப்பாணம், மார்ச்20

கிளிநொச்சி ஸ்கந்தபுரம் பகுதியில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்றில் இரண்டு பேர் மரணமடைந்துள்ளதாகத் தெரியவருகிறது.

ஒருவர் காயமடைந்த நிலையில் யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவம் பற்றி தெரிய வருவதாவது:- கடந்த புதன்கிழமை காலை இந்திய அமைதிப் படையினர் இப் பகுதியைச் சுற்றிவளைத்து தேடுதல் நடவடிக்கையில் இறங்கினர்

அப்பொழுது போராளிகள் குழுவுக்கும் படையினருக்கும் இடையில் மோதல் ஏற்பட்டதாகத் தெரியவருகிறது.

இம்மோதலின்போதே இரண்டுபேர் கொல்லப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது

காயமடைந்தவர் கிளிநொச்சி ஸ்கந்தபுரத்தைச் சேர்ந்த எஸ் சதானந்தன் வயது50) என்பவர். (ஓ- 0)

## ஆனந்த குமாரசாமி மேன்முறையீட்டு நீதியரசர்

கொழும்பு, மார்ச் 20

திரு. ஆனந்த குமாரசாமி மேன்முறையீட்டு நீதியரசராக நியமிக்கப்பட்டார்

இதுவரை காலமும் அவர் மேல்நீதிமன்ற நீதிபதியாகப் பணியாற்றி வந்தார்.

மேன்முறையீட்டு நீதியரசர்களாக திரு டக்ளஸ் பெரேரா பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் அசோகா குணவர்த்தன ஆகியோரும் நியமிக்கப்பட்டனர்.

நாளை திங்கட்கிழமை மூவரும் ஜனாதிபதி முன்னிலையில் விசுவாசப்பிரமாணம் எடுத்துக்கொள்வர். (இ-எ)

## வாந்திபேதி நோய்: மேலும் பலர் கண்டுபிடிப்பு

யாழ்ப்பாணம், மார்ச்20

யாழ் மாவட்டத்தில் மேலும் பல பகுதிகளில் வாந்திபேதி நோயால் பீடிக்கப்பட்ட பலர் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர்.

பொம்மவெளி, நீர்வேலி கோப்பாய் ஆகிய பகுதிகளில் மூவரும் இருவரும் மற்றும் உடுப்பிட்டி, மல்வம் பகுதியில் ஒருவரும் மேற்படி நோயால் பீடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது

இதேவேளையில் அதிகமான பகுதிகளில் வாந்திபேதி கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஏனைய பகுதிகளுக்கு இந் நோய் பரவுவதைத் தடுக்கும் நோக்குடன் கிணறுகளுக்கு குளோரின் போடுதல், பொது மலசலகூடச் சுத்திகரிப்பு என்பனவும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது (ஓ-9)

## பஞ்சாப்பில் நேற்று 11 பேர் சுட்டுக்கொலை

சண்டிகார், மார்ச் 20

பஞ்சாப் மாநிலத்தில் நேற்று பதினொருபேரை சீக்கியத் தீவிரவாதிகள் சுட்டுச்சொன்றனர்.

இவர்களில் ஐந்துபேர் ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். இருவர் பெண்கள், இருவர் ஆண்கள், ஒன்று குழந்தை.

பொலீசாருக்கு உளவு பார்த்ததற்காக இத் தண்டனை விதிக்கப்பட்டது என்று தீவிரவாதிகள் அறிவித்தனர்.

அமிர்தஸரஸ் நகரில் இச்சம்பவம் இடம்பெற்றது. (இ-எ)

## ஊழியர் சேமலாபநிதி திட்டத்துக்கு பதிலாக பென்ஷன் திட்டம் அமுல்

கொழும்பு, மார்ச் 20

ஊழியர் சேமலாப நிதித்திட்டத்துக்குப் பதிலாக பென்ஷன் திட்டம் ஒன்று அமுல் நடத்தப்படவுள்ளது.

இதற்கான சட்டமூலம் தயாரிக்கப்பட்டு வருவதாக தொழில் அமைச்சர் பி ஸி இம்புலான தெரிவித்தார்.

இதுவரை காலமும் சேமலாப நிதித் திட்டத்துக்கு வழங்கப்பட்டு வந்த கழிவுகள் பாதிக்கப்படமாட்டா.

ஊழியரும் முதலாளிமாரும் சேமலாப நிதித் திட்டத்திற்குச் செய்து வந்த கொடுப்பனவுகள் பென்ஷன் திட்டத்துடன் சேர்க்கப்படும்.

பென்ஷன் திட்டம் அமுலுக்கு வரும் நாட் தொடக்கம் இது அமு

(6-ஆம் பக்கம் பார்க்க]

## முச்சந்தி முனி



முந்தின வருஷங்களில் வெசாக் முடிஞ்சதும் தமிழரை ஒருகை பார்க்கப் பே கிளம்பண்டு கதை அடிபடுறது தான்வழக்கம். இப்ப மந்திரியார் புதுக்கதை சொல்லுறார்.........

அதுக்கு என்ன அர்த்தமோ யாருக்குத் தெரியும்...........?

## உயிரிழந்தோர், காயமுற்றோர் ஊனமுற்றோர் விவரமும் சேகரிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 20

வன்செயல்களில் இதுவரை உயிரிழந்தவர்கள், காயமடைந்தவர்கள், ஊனமுற்றவர்களின் விவரங்களைச் சேகரிக்கும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

பாதிக்கப்பட்டவர்கள், பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்கள்- இதுபற்றிய விவரங்களை யாழ் அரச அதிபருக்கும் புனர்வாழ்வு அமைச்சுக்கும் அனுப்பி வைக்கும் படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

உயிரிழந்தவர்களின் குடும்பங்கள், உயிரிழந்தவர்தான் குடும்பத்தின் ஒரே உழைப்பாளியா? அவரின் உழைப்பில் எத்தனை பேர் தங்கியிருந்தனர் போன்ற விவரங்களை அனுப்ப வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

எப்போது உயிரிழந்தார், அவரில் தங்கியிருந்தவரின் எண்ணிக்கை, உறவுமுறை ஆகிய விவரங்களை தவறாது முதல் தரத்திலேயே சமர்ப்பித்து விட்டால் புனர்வாழ்வு அமைச்சு நிவாரணம் வழங்குவதில் தாமதம் ஏற்படாது என்று அறிவிக்கப்படுகின்றது.

இவ்விவரங்களை அந்தந்தப்பகுதி கிராம சேவையாளர் ஊடாக பிரதேச உதவி அரச அதிபர்மூலம் யாழ் அரச அதிபருக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

உயிரிழந்தவர்கள் பற்றிய விவரம் அறிவிக்கப்பட்டவுடன் அவர்களின் குடும்பத்தினருக்கு ஈமக்கிரியைச் செலவாக இரண்டாயிரம் ரூபாவை யாழ் அரச அதிபர் உடனே வழங்குவார்.

நிரந்தர நட்டஈட்டுப் பணம்மற்றும் நிவாரணங்கள் புனர்வாழ்வு அமைச்சினாலேயே வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-எ)

எம். ஜி. இராமச்சந்திரனின்

## 'பாரத ரத்னா' விருதை ஜானகி பெற்றுக்கொண்டார்

புதுடில்லி, மார்ச் 20

மறைந்த தமிழக முதலமைச்சர் எம் ஜி இராமச்சந்திரனுக்கு வழங்கப்பட்ட 'பாரதரத்னா' விருதை திருமதி ஜானகி இராமச்சந்திரன் ஜனாதிபதி திரு ஆர். வெங்கட்ராமனிடம் இருந்து நேற்றுப்பெற்றுக்கொண்டார்.

புதுடில்லி ஜனாதிபதி மாளிகையின் தர்பார் மண்டபத்தில் இவ்வைபவம் நடந்தது.

பத்ம விபூஷண் விருது, மூவருக்கும் பத்மபூஷண் விருது, 13 பேருக்கும் பத்மஸ்ரீ விருது 26 பேருக்கும் வழங்கப்பட்டது. (ஓ-எ)

## இசைமேதை காலமானார்

சென்னை, மார்ச் 20

இசை மேதை எஸ். இராமநாதன் நேற்று சென்னையில் காலமானார்

அவருக்கு வயது 71 'சிலப்பதிகாரத்தில் இசை நுணுக்கம்' என்ற ஆராய்ச்சிக்காக அமெரிக்கப் பல்கலைக்கழகம் திரு இராமநாதனுக்கு டாக்டர் பட்டம் வழங்கி கௌரவித்தது (ஓ-எ)

## கொழும்பில் குண்டு வெடிப்பு

கொழும்பு, மட்டக்குளியில் கடந்த வியாழன் பிற்பகல் குண்டு

[6 ஆம் பக்கம் பார்க்க]

இளைய கலைமுறையின் இணைய நண்பன் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள சிங்கர் தையல் மெசின்களை நியாயமான விலையில் பெற்றுக்கொள்ளவும் உங்கள் தையல் மெசின்களை பழுது பார்க்கவும், உதிரிப்பாகங்களைப் பெற்றுக் கொள்ளவும் சிவா மல்ரி சொப்பிங் சென்ரர். மருதடி விநாயகர் கோவிலடி, மானிப்பாய். (1889)

இருக்கு கொண்டு அருவி வெட்டக்கூடிய உழக்கூடிய 12 H. P சீனத்தயாரிப்பான இரு சில் உழவு யெந்திரம் கலப்பை ரொட்டேவேற்றர் சேறு அடிக்கும் சில் அருவி வெட்டும் பகுதி, பெட்டி முதலிய உதிரிப் பாகங்களுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: கருணாநிதி கருணா சம்மாலை மீனாட்சி அம்மன் கோவில் வீதி, சங்கத்தானை, சாவகச்சேரி.

Prima (Lohmann) பிறவுன் பேடு Prima Lohmannவெள்ளைப்பேடு Prima Lohmann புறோயிலர் ஒவ்வொரு செவ்வாய் கிழமையும் வெள்ளிகிழமையும் விநியோகிக்கப்படும். விலை ள், 10 00, 9 50, 16. 50 தொகையாக எடுபோருக்கு கழிவு உண்டு T பத்மநாதன் K K S. Road, கோயில் வீதி, No 72, யாழ்ப்பாணம். (2086)

Up'ards Farm Ltd கேழிக் குஞ்சு விநியோகம். 23 ஆம் திகதி புதன்கிழமை (Lohmann) சேவல் குஞ்சுகள் விநியோகிக்கப்படும். விலை ரூ. 4 00. முன்கூட்டியே பதிவு செய்க. இல 9 சூராவத்தை றோட் (கந்தையா லேன்) சுன்னாகம் (ஸ்டேஷனுக்கு அருகாமையில்) (2082

Prima Quality chicks Lohmann வெள்ளை சிவப்பு பேட்டுக் குஞ்சுகள். புறோயிலர் குஞ்சுகள் Golden Comets சிவப்பு பேட்டுக்குஞ்சுகள், சேவற் குஞ்சுகள், Hy - Line, வெள்ளை, கறுப்பு பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு புதன்கிழமை, சனிக்கிழமையில் விநியோகிக்கப்படும். உடன் பதிவு செய்யவும்.
Nallur Farm Centre C/o நல்லூர் விடியோ சென்ரர், 19, முநேசர் ஒழுங்கை நல்லூர் (1988)

## வாடகைக்கு

கீழ் காணும் விலாசத்தில் இருக்கும் வீடு வாடகைக்குக் கொடுப்பதற்கு உண்டு 88/4, கோயில் வீதி, கைலாச பிள்ளையார் கோவிலடி, நல்லூர். (2022)

பரிசுத்த கார்மேல் ஆலயத்திற்கு சொந்தமான 17½ அடி நீளம், 15½ அடி அகலம் கொண்ட ஒரு கடை ஆலயத்தின் கிழக்குப் பக்கமாக மவுண்ட் கார்மேல் வீதியில் உண்டு. ஆக கடையை வாடகைக்குப் பெற்றுக் கொள்ள விரும்புவோர் 53/1 மவுண்ட் கார்மேல் வீதியில் வசிக்கும் யோ. அல்பிறட்ராசு எனபவருடன் தொடர்பு கொண்டு எழுத்து மூலம் விண்ணப்பிக்கவும் (2092)

### போட்டோ ஸ்ரட்

'கிளின்-கட்' யாழ் நகரின் முன்னணி நிறுவனம். உங்களின் போட்டோ ஸ்ரட் பிரதிகளுக்கு: கிளின்-கட் இல:- 239, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

## தேவை

அல்சேஷன் ஆண் நாய்க்குட்டி தேவை. விலை உட்பட விவரமாகத் தபால் மூலம் தொடர்பு கொள்க R. ராமச்சந்திரன் C/o அம்பாள் பார்மஸி நியூமார்க்கட் சாவகச்சேரி. (1986)

ஆங்கில தட்டெழுத்து, கரும்எழுத்து. கற்பிப்பதற்கு தகைமை உடையவர் தேவை. யாழ் மாநகர சபை எல்லைக்குள் உரியவர் விண்ணப்பிக்கவும். செந்தூரன் ரேடிங் கொம்பனி (K K S Road.) யாழ்ப்பாணம் (1987)

1ம் 2ம் 3ம் 4ம் குறுக்குத் தெருக்களில் அலுவலகமாகப் பாவிப்பதற்கு ஒரு நல்ல வீடு தேவை விண்ணப்பிக்கவும். விளம்பர இல 95 உதயன் யாழ்ப்பாணம் (2084)

Ford Prefect - 1 Si யும் அதற்கு மேற்பட்ட இலக்கமுடைய கார் தேவை. முழு விபரத்துடன் தொடர்பு கொள்ளவும். Omega, Manipay, Road, Jaffna (2089)

சகலவிதமான வெல்டிங் வேலை தெரிந்தவர்களும், உதவியாளர்களும் உடன் தேவை. நேரில் வரவும். சத்ரு வெல்டிங் வேக்ஸ், 379, பீச்றோட் குருநகர், யாழ்ப்பாணம். (1977)

தேவஸ்தான பசுவில் பால் கறக்கவும் கோவில் வேலைகள் தெரிந்த பல வேலை தெரிந்த ஒருவர் தேவை விபரங்களுக்கு நேரில் வரவும். துர்க்கை அம்மன் தேவஸ்தானம் நுணாவில் மேற்கு, சாவகச்சேரி. (1980)

குலோபல் ரேற் வேஸ் 149 முஸ்லிம் கல்லூரி வீதி, சோனகத்தெரு, யாழ்ப்பாணம் ரேற், கிறில், வெல்டிங்வேலை செய்வதற்கு நல்ல அனுபவம் உள்ள வேலையாள் தேவை சம்பளம் நேரில் பேசிக் கொள்ளலாம். உடன் நேரில் வரவும். யாழ் குடாநாட்டில் வசிப்பவர் விரும்பத்தக்கது (1985)

வங்கியில் வேலை செய்யும் இருவரைக் கொண்ட ஒரு குடும்பத்திற்கு யாழ் மாநகர எல்லைக்குள் ஒரு பகுதி வீடு அல்லது ஒரு முழுவீடு தேவை விண்ணப்பிக்கவும், விளம்பரதாரர் இல 95 உதயன், யாழ்ப்பாணம் (2074)

### மணமக்கள் தேவையா?

எம்மிடம் எல்லாச் சாதி சமயத்திலும் மணமக்கள் இருக்கிறார்கள் மங்களா ஏஜென்சி கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம் (1981)

### மணமகள் தேவை

நிரந்தர வதிவிட விசா பெற்று விக்ரோரியா அவுஸ்திரேலியா செல்லவிருக்கும் யாழ் இந்து வேளாள குல தீய பழக்கங்களற்ற 32 வயதுப் பட்டதாரி கு அவுஸ்திரேலியாவிலிருக்கும் பெற்றோர் சகோதரர்கள் அந்த குலத்தைச் சேர்ந்த தகுதியான மணமகளை எதிர்பார்க்கின்றனர் முழு விபரங்களுடன் விரைவில் தொடர்பு கொள்ளவும்: விளம்பர இல 91, C/o உதயன். [1957]

### சேவை

கட்டிங், பிளவர் மேக்கிங், ஐலிங், கெயர் ஸ்டைலிங் சிறந்த முறையில் கற்பிக்கப்படும் M. ராணி, 426/1 கில்னர் லேன், யாழ்ப்பாணம்.

## சேவை

உங்கள் மணப் பெண்ணை இந்திய மணப் பெண்போல் அலங்கரிக்கவும், திருமணவைபவங்களுக்கான திருமண கேக், பிறந்தநாள்கேக், மேல்நாட்டு கீழ்நாட்டு சிற்றுண்டி வகைகளை ஓடர் செய்து பெற்றுக் கொள்ள M ராணி, 426/1 கில்னர் லேன், யாழ்ப்பாணம். (2083)

### TYPEWRITER

தட்டச்சு இயந்திரங்கள் சிறந்த முறையில் திருத்திக் கொடுக்கப்படும். மற்றும் வாங்கவும் — விற்கவும் Fudo Enterprises, 39 / 17, 3rd Lane, Power House Road, Jaffna. (Near Samy & Co.) (1803)

## வகுப்புகள்

தொடக்கத்திலிருந்து பல்கலைக்கழகத்தோருக்கு, ஆசிரியர்களுக்கு, தொழிலாளருக்கு பரீட்சைகளுக்கு, எழுத பேச ஆங்கிலம் சனி, ஞாயிறு, செவ்வாய், வியாழன் 3 மணிக்கு இரண்டு பிரிவுகளாக, முன்னாள் அதிபர் ஆசிரியர் கலாசாலை ஆங்கில விரிவுரையாளர் பரீட்சைத் திணைக்கள ஆங்கில பரீட்சகர் திரு. சயிலாயநாதன் கற்பிக்கின்றார் இருபாலருக்கும் நேரடித் தொடர்பு: S T C.A நிறுவனம், சிவன் பண்ணை வீதி யாழ்ப்பாணம் கலை நிலையம் ஆலோலை ஒழுங்கை, வட்டுக் கோட்டை. (2061)

Radio, T V Air Conditioning Refrigeration, வயறிங், வெல்டிங், மோட்டர் மெக்கானிசம், வைண்டிங் Spoken English, Typing சிறந்த செய்முறைப் பயிற்சியுடன் ஆரம்பமாகின்றன. அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.
Vispa Engineering Aid Hall 328, நாவலர் வீதி, (ஆனைப்பந்திச் சந்திக்கு அருகில்) யாழ்ப்பாணம். (1940)

### தையல் வகுப்புகள்

தையல் கலையில் டிப்ளோமாவும், குறுகிய காலவகுப்புக்களும் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன. தொடர்பு கொள் திருமதி சு.சற்குருநாதன் (ஆஸ்பத்திரிக்கு அருகாமையில்) வட்டுக் கோட்டை. (1955)

### கல்வி

G.C.E. (O/L) இல்கணிதபாடம் கணித பாடத்தினை 19 வருட அனுபவமுள்ள ஆசிரியரினால் ஆரம்ப அறிவிலிருந்து விசேட சித்திக்குக் குறைந்த காலத்தில் நுணுக்கமான முறையில் கற்பிக்கப்படும் மற்றும் கொழும்பிலுள்ள பிரபல கல்லூரிகளில் கல்வி பயின்ற ஆசிரியரினால் Spoken English-ம் சிறந்த முறையில் கற்பிக்கப்படும் ஆறுமுகநாதன் 10 கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுகுளி. (1990)

புதிய கல்வித்திட்டத்திற்கமைய ஒப்படைவுகள் நிறைவேற்றுவதற்குரிய கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் போன்ற சகல பாடங்களையும் சிறந்த முறையில் பயிற்றப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களினால் வீடு வீடாகச் சென்று கற்பிக்கப்படும். காலை 6 00 - 8 30 க்குள் நேரடியாகச் சந்திக்கவும் ஆறுமுகநாதன், 10 கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுகுளி. (1990)

---

## முறைசாராக் கல்வி

யா/ கலாநிதி ஆ. தியாகராசா மத்திய மகாவித்தியாலயம்
காரைநகர்.

உடையமைத்தல் பாடநெறி விண்ணப்பங்கள் கோரப்படுகிறது.

விண்ணப்ப முடிவுத் திகதி
25 - 3 - 1988

அதிபர்
யா/ கலாநிதி ஆ. தியாகராசா மத்திய மகாவித்தியாலயம்
காரைநகர்.
(2091)

## தவக்கால சிந்தனைகள்

யாழ்ப்பாணம், மார்ச் 20 யாழ் புனித மரியன்னை பேராலயத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமைமுதல் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை தவக்கால சிந்தனைகள் இடம் பெறும். (இ)

## மட்டுவில் பகுதியில்

சாவகச்சேரி, மார்ச்20 மட்டுவில் பகுதியில் இந்திய அமைதிப்படை தேடுதல் நடவடிக்கையை தீவிரமாக்கி வருகிறது. (இ-31

## அஸ்மா நோய்க்கு விஷேட சிகிச்சை

S. T. பூரணேஸ்வரன்
"சாந்திக் கிளினிக்"
45, பாற்பண்ணை வீதி. திருநெல்வேலி.
நேரம்-: காலை 9 மணி முதல் 12 மணி வரை
மாலை 4 மணி முதல் 6 மணி வரை
ஞாயிறு:- அக்குபஞ்சர் வைத்தியசாலையில்
காலை 9 மணி முதல் 12 மணி வரை
(2090)

# பிரயாண ஒழுங்குகள்

★ சவூதி அரேபியா ★ குவைத்
★ பஹாரின் ★ அபுதாபி
★ சிங்கப்பூர்

சவூதி அரேபியா

1. கிளீனிங் லேபர் — 150 பேர் தேவை
வயது 21 — 40
சம்பளம் : 400 SR
2. சாரதி L. V. — 5 பேர் தேவை
வயது 22 — 35
சம்பளம் : 750 SR
3. சாரதி H. V. — 3 பேர் தேவை
வயது 22 — 40
சம்பளம் : 800 SR
4. குக் (சமையல்காரர்) — 5 பேர் தேவை
வயது 21 — 40
சம்பளம் : 650 SR

குவைத் :
ஆஸ்பத்திரி கிளீனர்ஸ்
வயது 17க்கு மேல், சம்பளம் : 35 QD
★ குவைத், பஹா ரின், அபுதாபி. சிங்கப்பூர்.
★ சவுஸ்மேட் உடனடிப் பிரயாணம்.

**அரிய சந்தர்ப்பம்! தவறவிடாதீர்கள்!!**

குறைந்த கட்டணத்தில் மனம் நிறைந்த பிரயாணம

**சவூதி அரேபியா:**
எயர்ப்போட் கிளீனர்ஸ்
100 பேர் தேவை, சம்பளம் 350 + 100
கட்டுப்பணம் 8000/-
(ஒ பந்தம் 5 மாதங்கள்)

மேலதிக விபரங்களுக்கு உடன் தொடர்பு கொள்ளவும்.
முக்கிய குறிப்பு :- முற்பணம் அறவிடப்படமாட்டாது, செவ்வாய் தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை மணி 8-30 முதல் மாலை 4-30 மணிவரை நிலையம் திறந்திருக்கும்.
ஏமாற்றத்தைத் தவிர்த்து நம்பிக்கையுடன் குறித்த தவணையில் பிரயாணம் செய்ய இன்றே தொடர்பு கொள்ளவும் சுன்னாகம் கோல்டன் ரவல்ஸ் & ரூர்ஸுடன்

தொடர்பு:-
## கோல்டன் ரவல்ஸ் & ரூர்ஸ்
புகையிரத நிலைய வீதி, சுன்னாகம்.

தரமான புதிய, பழைய
**தமிழ், ஹிந்தி, ஆங்கில**
வீடியோப் படப் பிரதிகளை
யாழ் மக்களுக்கு
வழங்கவென
உருவாக்கப்பட்ட புதியதோர் ஸ்தாபனம்



## சிந்து வீடியோ விசன்

எம்.ஜி.ஆர், சிவாஜி---
சத்தியராஜ்
சசிகாபூர், ராஜேஸ்கண்ணா--
அமிதாப்பச்சன்
பிறெட் வில்லியம்ஸ்---
ஜிம்புறௌண்
புருஸ்லி--- ஜக்கிசான்ஸ்

இவர்களின் எந்த
**வீடியோப்படம் தேவை?**
எம்மிடம் வாருங்கள்!

**சிந்து வீடியோ விசன்**
இல. 301, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(1975)

## காணவில்லை

சிவலிங்கம் ஜெயராஜ். பாண்டிருப்பு, 2 கல்முனை என்னும் விலாசமுள்ள, எனது அடையாள அட்டை 18-03-1988 ல் கஸ்தூரியார் வீதியில் தவறிவிட்டது கண்டெடுப்பவர்கள் எஸ். மகேந்திரன் 74/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (1992)

ஆ. வடிவேலு பேத்தி அம்மன் கோவிலடி நாவலடி லேனைச் சேர்ந்த வடிவேலு கண்மணி (1938) வடிவேலு சித்திரா (1964) ஆகிய இரண்டு பெயருடைய அடையாள அட்டையைக் காணவில்லை, கொண்டு வந்து தருபவருக்கு சன்மானம் வழங்கப்படும். (1995)

## யாழ். - கொழும்பு விமான சேவை

ஒழுங்காக நடைபெறுகின்றது
21-3-88 திங்கட்கிழமை
நண்பகல் விமான சேவைக்கு
**வெற்று ஆசனங்கள் உண்டு.**

பதிவுகள் உடன் ஏற்றுக்கொள்ளப்படும்
பலாலிக்கு விசேஷ போக்குவரத்து வசதிகள் உண்டு.

Film roll Processing & Printing Accepted.
Delivery within 3 days.

**MACK**
**Communication & Travels**
இல. 8, முதலாம் ஒழுங்கை,
பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

## ஓராண்டு நினைவஞ்சலி



அன்னையின் காத்தில்: 14 - 03 - 1960
யமனின் பிடியில்: 02 - 04 - 1987
திதி நாள்: 21 - 03 - 1988

உன் அன்பான புன்சிரிப்பாலும் பண்போடு பழகும் பேச்சாலும் பணிவான நடத்தையாலும் எல்லோரிடமும் இதயக்கனியான விந்தனே! எங்கு சென்றாய்? போகும்போது மீளமாட்டேன்! என் ஒரு வார்த்தை தான்கூறினையா? ஐயோ! கொடிய அரக்கர்கள் உன் வீரமறிய மல் பிறமுதுகில் அல்லவா பழி தீர்த்தனர். காலம் அழிந்தாலும் உன் வீரமும் புகழும் அழியாது. காலம் எல்லாம் குடும்பத்திற்கு முன்னோடியாக இருப்பாய் என்றிருக்கக் காலன் வந்து பாதியிலும் மீதியிருக்க, பறித்தானே பாவி வன் உன் நினைவான "நாளை" திருவில் மைதானம் தான் பதில் கூறும்.

ஆத்மா சாந்திக்கு ஆண்டவன் அருள்:

இங்ஙனம்
அன்புத்தாய், அண்ணன்மார், தம்பி, அக்காமார், அத்தான்மார், மச்சான்மார், மருமக்கள், பெருமக்கள், மற்றும் உற்றார், உறவினர்களும், நண்பர்களும்
திருமதி பூபாலசுந்தரம்,
ஊறணி வல்வெட்டித்துறை. (1989)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போலி அரசியல்வாதிகளின் கூடாரமாக வீரப்பன் அணியினர்

## அன்பழகன் குற்றச்சாட்டு

சென்னையிலிருந்து எமது அலுவலகச் சிறப்புப் பிரதிநிதி: ந. வித்தியாதரன்

சென்னை, மார்ச் 19

போலி அரசியல் வாதிகளின் கூடாரமாக வீரப்பன் அணியினர் விளங்குகிறார்கள் என தி. மு. க. பொதுச் செயலாளர் அன்பழகன் கூறினார்.

சென்னை ராயபுரம் பகுதி தி. மு. க. சார்பில் ஆட்சாகிப் தெருவில் தி. மு. க. நிகழ்ச்சியில்லே சுவகையில் தி. மு. க. பொதுச் செயலாளர் அன்பழகன் கூறியதாவது:-

முதல்வர் பதவி என்பது கௌரவமான ஒரு பதவியாக முன் பெல்லாம் கருதப்பட்டது. அரசியல் ஞானம் தெரிந்த சிந்தனை, ராஜதந்திரம், தியாக உள்ளம் கொண்டவர்கள் முதல்வராக வர ஆசைப்பட்டனர்.

ஆனால் இன்றோ முதல்வர் பதவிக்கு எந்தத் தகுதியும் திறமையும் தேவை இல்லை என்று ஆகிவிட்டது.

மனைவி என்ற ஒரு தகுதி மட்டும் போதும் என ஒரு புதிய வரலாற்றை சிலர் உருவாக்கி விட்டனர். அவர்கள் தகுதியைப் பற்றி அவர்களே கவலைப்படவில்லை.

ஜானகி அணியில் உள்ள ஒரு சிலர் இன்றைக்கு பேசுகின்ற பேச்சுக்களை உன்னிப்பாகக் கவனித்தால் இவர்கள் ஒரு சுயநலவாதிகள் என்பது தெளிவாக விளங்கும்.

காரணம் தி. மு. க. இந்தி எதிர்ப்பு பிரச்சினையானாலும் சரி, இலங்கைத் தமிழர் பிரச்சினையானாலும் சரி கொண்ட இலட்சியத்தில் உறுதியாக நின்று மத்திய அரசிற்கு எதிராகப் போராட்டங்கள் நடத்திய போது இந்தக் கும்பலில் உள்ள பலர் ஏளனம் செய்தனர்.

கேலி, கிண்டல் புரிந்தனர். பதவியைத் தக்க வைத்துக் கொள்வதற்காக அவதூறுகளை கூறினர். பணத்தைக் கோடி கோடியாக சுருட்டுவதற்காக, இலட்சியத்தையே சாகடித்தனர். இன்று பதவி பறிபோய்விட்ட நிலையில் வீராதி வீரர்கள் நாங்கள் தான் என்று பித்தலாட்டம் ஆடுகின்றனர்.

மத்திய அரசை எழ்த்துவோம். காங்கிரஸ் கட்சியைக் காலில் போட்டு மிதிப்போம் என்றெல்லாம் இன்று பேசுகிறார்கள். தங்களுக்கென்று ஏதாவது ஆபத்து வரும்போது தான் இவர்களுக்கும் வீரமும் வருகிறது. சுய சிந்தனையும் வருகிறது. இது இவர்களின் போலி அரசியலையே காட்டுகிறது திடீரென காளிமுத்துவுக்கு வீரம் வந்து மத்திய அரசை தாக்கிப் பேச ஆரம்பித்திருக்கிறார்.

இந்த துணிச்சல் ஒரு ஐந்து அல்லது ஆறு மாதங்களுக்கு முன்பு வந்திருந்தால் காளிமுத்துவைப் பாராட்டி இருப்பேன். அப்போதெல்லாம் இவர் வாயை திறப்பதே கிடையாது. எப்போதாவது வாயை இவர் திறந்து காங்கிரஸ் கட்சியைத் தாக்கிப் பேசுவாரானால், உடனே ராபின் மெய்ன்! விவகாரம் இவரைப் பேயாகத் துரத்தும், உடனே வீரத்தை அடகு வைத்து விட்டுக் கோழையாகி விடுவார். இது தான் இவரின் கடந்தகால அரசியல் வாழ்க்கை. ஆனால் தற்போது வீரம் பேசுகிறார் இவரைப்போன்ற போலி அரசியல் வாதிகளின் கூடாரம் தான் வீரப்பன் அணியினர். இவ்வாறு அன்பழகன் பேசினார்.

## தமிழகத்திலிருந்து

### சிவாஜி கட்சியுடன் ஜானகி அணி கூட்டா?

சென்னை, மார்ச் 19

சிவாஜி கட்சியுடன் ஜானகி அணியினர் கூட்டு வைத்திருப்பதாகச் சொல்லப்படுவதை ஆர். எம். வீரப்பன் மறுத்துள்ளார்.

சிவாஜியுடன் நாங்கள் கூட்டு வைத்துக்கொண்டுள்ளோம் என்பது உண்மை அல்ல. ஆனால் அவர் தனியாகக் கட்சி துவக்க அடிப்படையாக அமைந்துவிட்ட காரணம் காங்கிரஸ் கட்சியும் பேலிடமும் எம். ஜி. ஆர். ஆட்சிக்கு இழைத்த துரோகம் தான் என்பதைச் சிவாஜி வெளிப்படையாகச் சொல்லிவருகிறார்.

அந்த உணர்வுடன் நாங்களும் அவரும் இப்போது ஒன்றுபட்டிருக்கிறோம் என்பது தான் உண்மை என்று ஒரு பேட்டியில் ஆர். எம். வீரப்பன் கூறியுள்ளார்.

---

மாகாண சபைக்குப் பதில்

# மாற்று அரசியல் அமைப்பு ஒன்று அவசியம்

## இந்தியாவிடம் வற்புறுத்து

இலங்கை — இந்திய ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ளவாறு இலங்கையின் பல இன, பல மொழி, பலமத சமூகத்தின் வேறுபட்ட தன்மைகளைப் பாதுகாக்கவும் — அனைத்து குடிமக்களும் சமமானவராகவும், பாதுகாப்பாகவும் ஒற்றுமையுடன் வாழ்ந்து தங்கள் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றிக் கொள்ளவும் செழிப்புப் பெறவும் மாற்று அரசியல் அமைப்பு ஒன்று உருவாக்குவது அவசியமானது.

இவ்வாறு தமிழ் ஈழம் மக்கள் மன்றம் இந்திய அரசிடம் வலியுறுத்தி உள்ளது.

பிரஸ்தாப மன்றம் மாத இறுதியில் தமிழர் பிரச்சினை சம்பந்தமாக பல தீர்மானங்களை நிறைவேற்றி அவற்றை மகஜர் வடிவத்தில் இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்திக்கும் இலங்கை ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கும் அனுப்பி வைத்துள்ளது.

அந்த மகஜரிலேயே முன் கண்டவாறு வலியுறுத்தப்பட்டுள்ளது

அந்த மகஜரில் கூறப்பட்டுள்ளதாவது:-

மாகாண சபை அமைப்பு மூலம் தமிழ் மக்களின் மரபுவழித் தாயகமான வடக்கு கிழக்கு மாகாணங்களை இணைத்து இலங்கையில் ஒரு பிராந்திய சுயாட்சித் தமிழ் அரசு நிறுவலாம். என இந்தியா கொண்டிருக்கக் கூடிய எதிர்பார்ப்புகள் யாவும் இலங்கை அரசியல் அமைப்புத்திட்டத்தின் 13 ஆம் திருத்தம் பற்றி ஆராயக் கூடிய இலங்கை உயர் நீதி மன்றின் தீர்ப்பினால் இல்லாமற் செய்யப்பட்டுள்ளன.

இச் சந்தர்ப்பத்தில், இலங்கை- அரசியல் அமைப்புத் திட்டமே தமிழ் மக்களின் ஆணை பெறப்படாமலும், ஒரிருவரைத்தவிர அவர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் பங்கேற்காமலும் நிறைவேற்றப் பட்டது. என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

இத்தீர்ப்பில் உத்தேச மாகாணசபைகள் மீது இறுதிக் கட்டுப்பாடு இலங்கை நாடாளுமன்றத்திற்கும் ஜனாதிபதிக்கும் இருக்குமென்றும் ஜனாதிபதியும் நாடாளுமன்றமுமே உயரிய ஆதிக்கம் கொண்டிருப்பவையாக விருக்குமென்றும், நாடாளுமன்ற சட்டஆக்கங்களைப் போலல்லாது, மாகாணசபைகள் இயற்றும் எந்தவொரு சட்டத்தையும் பல ஆண்டுகள் கழிந்த பின்பும் கூட நீதிமன்றத்தில் எதிர்க்கலாமென்றும் கூறப்பட்டுள்ளது.

எனவே ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ளவாறு இலங்கையின் பல இன பலமொழி, பலமத சமூகத்தின் வேறுபட்ட தன்மைகளைப்பாதுகாக்கவும் அனைத்து குடிமக்களும் சமமானவராகவும், பாதுகாப்பாகவும் ஒற்றுமையுடன் வாழ்ந்து தங்கள் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றிக் கொள்ளவும் செழிப்புப் பெறவும் மாற்று அரசியல் அமைப்பு ஒன்று உருவாக்குவது அவசியமானது.

மாகாண சபைக்கான அதிகாரங்கள் சம்பந்தமாகக் கூட இலங்கை அரசு-

ஒத்துக்கொள்ளப்பட்ட அதிகாரங்களைக் கூடப் பகிர்ந்தளிக்கத் தவறி விட்டது.

ஒப்பந்தம் நிறைவேறிய பொழுது தீர்க்கப்படாது எஞ்சியிருந்த விடயங்கள் சம்பந்தமாக இந்திய அரசுடன் பேசித் தீர்க்க வேண்டிய கடமையைப் புறக்கணித்துள்ளது.

ஏற்கனவே, காணி, கல்வி, பொலீஸ் மற்றும் விடயங்களில் ஒத்துக் கொள்ளப்பட்ட அதிகாரங்களின் எல்லையைக் கபடத்தனமாக அரசியல் அமைப்புத்திட்டத்திருத்தத்தில் மாற்றியுள்ளது

இப்படி மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது

### வலி. வடக்கிலுள்ள விதவைகள் அநாதைகளுக்கு உதவி வழங்கத் திட்டம்

காங்கேசன்துறை, மார்ச் 20

வலி வடக்கில் விதவைகள் அநாதைகளுக்கு உதவி வழங்கும் திட்டம் ஒன்றை வலி வடக்கு பிரசைகள் குழு ஒன்றியம் வெளிநாட்டு உதவி வழங்கும் நிறுவனம் ஒன்றின் உதவியுடன் செயல்படுத்த உள்ளது.

வலி. வடக்கில் இராணுவ நடவடிக்கையினாலும், மற்றும் அசம்பாவிதங்களினாலும் பாதிக்கப்பட்டு விதவைகள், அநாதைகள் பராமரிப்பு இன்றி கஷ்டமுறுபவர்களுக்கு உதவுவதற்காகவே இத் திட்டம் செயற்படுத்தப்பட உள்ளது

வலி, வடக்கில் உள்ள விதவைகள், அநாதைகள் தமது விபரங்களை ஒன்றியத்திற்கு காலதாமதமின்றி அறிவிக்குமாறு கோரப்பட்டுள்ளனர். (இ-68)

### வருடாந்த பொதுக்கூட்டம்

வடமாகாண ஆசிரிய சங்க சகாய நிதியின் இருபத்தெட்டாவது வருடாந்தப் பொதுக் கூட்டம் இம்மாதம் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.


நம்பிக்கை
நாணயத்தின்
சின்னம் → ஷப்ரு




நிதித்துறையில்
உங்கள் நண்பன்

★ ஷப்ரு ★

யூனிக்கோ பினான்ஸ் லிமிட்டெட் வழங்கும்

நிலையான முதலீட்டுத்திட்டம்

✯ குறைந்த வைப்புத் தொகை 1000/-
✯ மாதாந்த வட்டி பெற குறைந்த வைப்புத் தொகை 5000/-

APPROVED BY THE MONETORY BOARD OF THE CENTRAL BANK OF CEYLON ACT No 27 OF 1979.

MEMBER OF HIRE-PURCHASE AND FINANCE ASSOCIATION.

| காலம் | மாதாந்தம் | முதிர்ச்சி |
| --- | --- | --- |
| 3 மாதங்கள் | ---- | 14 வீதம் |
| 6 மாதங்கள் | ---- | 16 வீதம் |
| 12 மாதங்கள் | 16 வீதம் | 17 வீதம் |
| 24 மாதங்கள் | 17 வீதம் | 18 வீதம் |
| 36 மாதங்கள் | 18 வீதம் | ---- |

உங்கள் வசதிக்கேற்ப பின்வரும் வழிகளில் வட்டியினைப் பெற்றுக்கொள்ளலாம்:-
✯ பணமாக ✯ காசோலையாக ✯ வங்கிக் கணக்கூடாக

நிறுவனத்தின் நிதி நிலை விபரம்

| | 1984 → 85 | 1985 → 86 | 1986 → 87 |
| --- | --- | --- | --- |
| மூலதனம் | 2,230,000 | 4,365,000 | 5,917,000 |
| மொத்த ஒதுக்கம் | 1,385,335 | 3,030,474 | 5,425,354 |
| வைப்பு | 27,737,553 | 58,970,366 | 100,577,492 |
| வங்கிக் கடன்கள் | 1,791,516 | 8,283,876 | 7,718,284 |
| ரொக்கமும் வங்கி இருப்பும் | 4,386,371 | 16,206,987 | 25,811,712 |
| வைப்பாளருக்கான வட்டி செலுத்து முன் லாபம் | 5,783,720 | 9,8[illegible] | 19,310,787 |
| வைப்பாளருக்கான வட்டி | 3,827,514 | 8,505,201 | 16,880,875 |
| வரி செலுத்து முன் தேறிய லாபம் | 1,956,206 | 1,372,825 | 2,430,012 |
| வரி செலுத்திய பின் தேறிய லாபம் | 1,356.206 | 1,372,825 | 2,330,012 |
| பங்காளருக்கான சலுகைகள் | | [illegible] | [illegible] |

இயக்குநர் சபை

★ பாலசுப்பிரமணியம், A. I. B (Lon)
★ ஜே. டி நவரட்ணம், A. I. B. (Lon)
★ வீ. பி. ஈ. கருணாரட்ண, (சட்டத்தரணி)
★ ஆர். பாலசுப்பிரமணியம்.
★ ஓ. சி. எம். ஹசன்பாரி, B.A.

மேலும் தகவல்களைப் பெற எமது அலுவலகத்துடன் நேரடியாகவோ அல்லது கடிதம் மூலமோ தொடர்பு கொள்ளலாம்.

ஷப்ரு நிதி நிறுவனம்

61 நியூ புல்லர்ஸ் வீதி, கொழும்பு - 4. தொலைபேசி: 589310, 500576

யாழ். முகவர், 207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 22073


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாண

# செஞ்சிலுவைச் சங்க அலுவலகம் விரைவில் மூடப்படும்

யாழ்ப்பாணம், மார்ச்20

யாழ். நகரில் 'ஞானம்ஸ்' ஹொட்டலில் இயங்கி வரும் இலங்கை - இந்தியசெஞ்சிலுவைச் சங்க அலுவலகம் இன்னும் ஒரு சில நாட்களில் மூடப்பட உள்ளது.

இதுவரை காலமும் இந்த அலுவலகத்தில் இருந்து தமதுசடமையை மேற்கொண்டு வந்த இலங்கை-இந்திய செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி ஆகிய பகுதிகளில் தமது பணிகளை மேற்கொள்ளச் செல்வதனாலேயே மேற்படி அலுவலகம் மூடப்பட உள்ளதாக அறிவிக்கப்படுகிறது

இதேவேளை யாழ்ப்பாண அலுவலகத்திற்குப் பதிலாக காங்கேசன்துறையில் ஓர் அலுவலகம் திறக்கப்படக் கூடும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுபற்றி செஞ்சிலுவைச் சங்க அதிகாரி ஒருவருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது—

யாழ் நகரில் தற்பொழுது சுமுக நிலை திரும்பி விட்டதாலேயே தாம் அலுவலகத்தை மூட எண்ணியுள்ளதாக அவர் கூறினார்.

இலங்கை - இந்திய செஞ்சிலுவைச் சங்கங்களினூல் நேரடியாக யாழ். மக்களுக்கு வழங்கப்பட்டு வந்த உதவிகள் தொடருமா? அவ்வாறயின் எங்கே, எப்படி, யார்மூலம் வழங்கப்படும் என்று கேட்டதற்கு அது குறித்து தமக்கு எதுவும் தெரியாது என்றும் அவர் கூறினார். (ஒ-9)

## பிரிட்டிஷ் உதவி; தமிழ்ப் பகுதி புறக்கணிப்பு

வட - கிழக்கு மாகாணங்களில் வன்செயல்களால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு பிரிட்டிஷ் அரசு வழங்கிய உதவிகளில் தமிழ் பகுதிகள் புறக்கணிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பான புகாரை மட்டக்களப்பு பிரஜைகள் குழுவின் செயலாளர் திரு. கதிர் பாரதிதாசன் பிரிட்டிஷ் தூதுவருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதம் ஒன்றில் தெரிவித்துள்ளார்.

இக் கடிதத்தில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

வவுனியா, திருமலை, அம்பாறை மாவட்டங்களில் வாழும் சிங்கள மக்களுக்கே இந்த உதவி வழங்க இலங்கை அரசு தீர்மானித்துள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார். [ஒ-21]

## மின் அதிகரிப்பால் ஏற்பட்ட சேதம்

பலாலி, மார்ச்.18

கடந்த வாரம் அச்சுவேலிப் பகுதியில் நண்பகல் திடீரென ஏற்பட்ட மின்சார அதிகரிப்புக்காரணமாக அப்பகுதி மக்களது விலையுயர்ந்த மின் சாதனங்கள் பல சேதமுற்றன.

ரெலிவிஷன், டெக், ரேப்றைக்கோடர், குளிர் சாதனப் பெட்டிகள், மின் குமிழ்கள், மோட்டர்கள், சிறியரக மின் மாற்றிகள் எரிந்து பழுதடைந்தன.

அச்சுவேலிப் பகுதி மின் மாற்றியில் உள்ள கோளாறு காரணமாக ஏற்பட்ட இந்த மின் அதிகரிப்பு சில மணி நேரம் நீடித்ததாயினும் பின்பு திருத்தியமைக்கப்பட்டதனால் மேலதிக பாதிப்புக்கள் தவிர்க்கப்பட்டன. (ஒ-7-119)

## கைக்கடிகாரம் யாருடையது?

யாழ்ப்பாணம், மார்ச்20

சங்கரத்தை துணைவி சந்திக்கு சமீபமாக கண்டெடுக்கப்பட்ட பெண்கள் கைக்கடிகாரம் ஒன்று உதயன் பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர் தகுந்த அத்தாட்சி காட்டி விளம்பரப் பணிமனை இல: 15, 2 ஆம் ஒழுங்கை மின்சார நிலைய வீதியில் பெற்றுக் கொள்ளலாம். (இ-க)

## பிரேமா இந்தியா செல்வார்

பிரதமர் பிரேமதாஸா அடுத்த மாதம் இந்தியா செல்கின்றார்

புதுடில்லியில் நடைபெறும் ஐ. நா, வீடமைப்பு ஆணைக் குழுவின் 11வது மாநாட்டில் முக்கிய உரையொன்றை நிகழ்த்தவே அவர் செல்கின்றார்.

இம்மாநாடு ஏப்ரல் 6 முதல் 12 வரை நடைபெறவிருக்கிறது.

அங்கிருந்து பின்னர் நேபாளத்துக்கு விஜயஞ் செய்வார். (ஒ எ)

வாந்திபேதி

## வடபகுதியில் இதுவரை 80 நோயாளர்கள்!

யாழ்ப்பாணம், மார்ச்20

வட பகுதியில் இதுவரை 80 பேர் வாந்திபேதி நோயாளிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்

வடபிராந்திய சுகாதாரத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கை ஒன்றில் மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது

கடந்த பெப்ரவரி 2 ஆம் திகதியில் இருந்து இதுவரை 80 பேர் வாந்திபேதி நோயினால் பீடிக்கப்பட்டுள்ளனர் என்றும்—

இதில் யாழ். மாநகர சபைப் பகுதியில் 41 பேரும், கோப்பாய்ப் பகுதியில் 13பேரும், மானிப்பாயில் 12 பேரும், தீவுப் பகுதியில் 7 பேரும், காங்கேசன் துறையில் 4 பேரும், கிளிநொச்சியில் 2 பேரும், சாவகச்சேரியில் ஒருவரும் அடங்குவர்.

இந்த 80 பேரில் பலர் நோய்க்கான சிகிச்சைகளை முடித்து பூரண சுகமடைந்து வீடுகளுக்குச் சென்றுவிட்டனர் என்றும் ஏறத்தாள 15 பேர் வரையிலேயே யாழ். போதனா வைத்தியசாலையில் இயங்கிவரும் வாந்திபேதி வாட்டில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்றும் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளையில் இதுவரை வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்ட எந்த ஒரு வாந்திபேதி நோயாளியும் மரணமடையவில்லை.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்படாத வாந்திபேதி நோயாளி என்று சந்தேகிக்கப்படும் 9பேர் வீடுகளிலே மரணமாகியுள்ளனர். (இ 9)

## ப. நோ. கூ. சங்க நிதி நெருக்கடி தீரும்

காங்கேசன்துறை, மார்ச், 20

இலவச உணவு விநியோகத்தினால் ப. நோ. கூ. சங்கங்கள் நிதி நெருக்கடிக்கு உள்ளாகாமல் இருக்க அவற்றுக்கு குறிப்பிட்ட அளவு நிதியுதவி செய்யப்பட உள்ளது.

அசம்பாவிதங்கள் காரணமாக பாதிக்கப்பட்டு நிதி நெருக்கடிக்குள்ளாகியுள்ள யாழ் மாவட்ட ப. நோ. கூ. சங்கங்களிடம் இலவச உணவு விநியோகத்தையும் ஒப்படைப்பதால் அவை மேலும் நிதி நெருக்கடிக்கு ஆளாகுமாகையால் அவற்றுக்கு நிதியுதவி செய்ய வேண்டுமென யாழ். தேசிய கூட்டுறவுச் சபைத்தலைவர் திரு. எஸ். சிவமகாராசா யாழ். அரச அதிபரிடம் கோரியிருந்தார்.

இதை அடுத்து யாழ். அரச அதிபர் கூட்டுறவு உதவி ஆணையாளர், உணவு திணைக்கள அதிகாரிகள், தேசிய கூட்டுறவுச் சபை பிரதிநிதிகள் ஆகியோரை அழைத்து இதுபற்றி ஆராய்ந்தார்.

அச்சமயம் யாழ். மாவட்ட ப. நோ. கூ. சங்கங்களுக்கு இலவச உணவு விநியோகத்திற்காக குறிப்பிட்ட அளவு நிதியுதவி செய்ய ஏற்பாடு செய்வதென முடிவு எடுக்கப்பட்டது.

அத்துடன் அசம்பாவிதங்களினால் பாதிக்கப்பட்ட கூட்டுறவு சங்கங்களுக்கு நஷ்டஈடு பெற்றுக் கொடுக்க ஆவன செய்வதெனவும் முடிவு எடுக்கப்பட்டது. (இ-68)


**Institute of Engineering Technology**

11/3 Stanley Road, Jaffna.

12 வருடகால அனுபவமுள்ள ஸ்தாபனம். வெளிநாடுகளில் வேலை வாய்ப்பைப் பெறக்கூடியதாக 3 மாதப் பயிற்சிகள் நடாத்தப்படும்.

- ✶ மோட்டார் பொறியியல் - Motor Machanism
- ✶ மின் இணைப்பு - Electrical Wiring
- ✶ வைண்டிங் - Winding

ஆரம்பம்:- 23-03-1988



**The DATACENTER**

Centre for Computer Studies

Courses Conducted in:

- ★ COMPUTER PROGRAMMING (Basic and Cob l)
- ★ WORD PROCESSING (Using WORDSTAR)
- ★ IDPM

மேலதிக விபரங்களுக்கு:

**The DATACENTER,**

17, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.



## பிரயாண ஒழுங்குகள்

★ சவூதி அரேபியா

| | (வயது) |
|---|---|
| ★ எயாப்போட் கிளீனேர்ஸ் | 21-40 |
| ★ ஆஸ்பத்திரி கிளீனேர்ஸ் | 21-40 |
| ★ ஹொட்டல்வெயிற்றர்ஸ் | 21-40 |
| ★ லேபரேர்ஸ் | 25-40 |

★ குவைத்

பெண்கள்--- 40 பெண்கள் உடனடியாகத் தேவை தையல் வேலை தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

★ காமன்ஸ் (Garments)

இருபாலாரும் 18-35 வரை (தமிழ் முஸ்லிம்) 20-3-1988க்குள் 5 படம் பாஸ்போட்டுடன் இங்கு தொடர்பு கொள்ளவும்.

★ குவைத்

ஆண்கள்: ஆஸ்பத்திரி கிளீனேர்ஸ் வயது 17இலிருந்து 45வரை

சலரி K.T. 30 டினர்.

2 மணித்தியாலம் மேலதிக வேலை

3 வருட ஒப்பந்தம்

சாப்பாடு, தங்குமிடம், வைத்திய வசதி எல்லாம் இலவசம்.

மேலதிக விவரங்களுக்குக் கீழ்க்காணும் முகவரியிலுள்ள எமது காரியாலயத்துடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

**யுனைற்றட் இன்ரநஷனல் ஏஜன்சி**

666, கே. கே. எஸ். ரோட்,

யாழ்ப்பாணம்.

(யாழ். இந்துக்கல்லூரிக்கு அருகாமை)



## பிரயாண ஒழுங்குகள்

### சவூதி அரேபியா

### உடனடி வேலைவாய்ப்புகள்

1. பொறியியலாளர்கள்:

| | | |
|---|---|---|
| 1. | பாரமரிப்பு என்ஜினியர் (கப்பல் துறை) | 3000 SR - 4000 SR |
| 2. | மின்னியல் என்ஜினியர் | 1800 SR - 2500 SR |
| 3. | இலத்திரனியல் என்ஜினியர் | 1800 SR - 2500 SR |
| 4. | குளிரூட்டியல் என்ஜினியர் | 2000 SR - 2500 SR |
| 5. | தொலைத்தொடர்பு என்ஜினியர் | 2000 SR - 2500 SR |
| 6. | இயந்திரவியல் என்ஜினியர் | 1800 SR - 2500 SR |

2. தொழில் நுட்பவியலாளர்கள்:

| | | |
|---|---|---|
| 1. | இலத்திரனியல் | 700 - 800 SR |
| 2. | தொலைத்தொடர்பு | 800 SR |
| 3 | கப்பல்துறை இயந்திர தொழிலாளர்கள் | 800 SR |
| 4. | கப்பல்துறை மின்னிணைப்பாளர்கள் | 800 SR |
| 5. | குளிரூட்டல் – தொழிலாளர்கள் | 800 SR |
| 6. | மின்பட வரைஞர் | 1000 - 1200 SR |
| 7. | கனரக வாகன திருத்தவியலாளர்கள் | 800 SR |

| | | |
|---|---|---|
| 3. | பாரந்தூக்கி இயக்குநர் | 700 - 800 SR |
| 4. | சுழியோடிகள் | 500 SR |
| 5. | மின்சுருள் சுற்றுபவர்கள் | 650 - 750 SR |
| 6. | குழாய் பொருத்துனர் | 500 - 650 SR |
| 7. | கூலியாட்கள் (வாகன சாரதி லைசென்ஸ் உடையவர்) | 350 + 100 SR |
| 8. | துப்பரவாக்கிகள் - கூலியாட்கள் | 300 + 100 SR |

எல்லா வகையினருக்கும் 3 வருட ஒப்பந்தம் + இலவச தங்குமிடம் + உணவு

சனி. ஞாயிற்றுக் கிழமைகளில் நேர்முகப் பரீட்சை இருப்பதால் உடன் தொடர்பு கொள்க.

**K. லிங்கம்** காளுவன் சந்தி, சுழிபுரம்.

**அ. தவச்செல்வம்** காளுவன் சந்தி, சுழிபுரம்.



### 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் எஸ். என். இராஜநாயகம்

தோற்றம்: 24-3-1931 மறைவு: 20-3-1987

'நிழல் தந்த பெருந்தகையே
நீர் எங்களுடன் வாழ்ந்திட்ட
நினைவகலா நாட்கள் தன்னை
நினைத்தே நாம் வாடுகிறோம்;
விண்ணகத்து வாழ்வுக்காய்
விரைந்தே நீர் சென்றிட்டீர்;
ஓராண்டு ஆனாலும் ஓயாத துயரத்துடன்
உழல்கின்றோம் உம் நினைவால்
எம் அன்புத் தெய்வத்தின்
இறை இன்பம் இன்புறவே
இறையவனின் பாதங்கள்
என்றும் நாம் பற்றுகிறோம்.

திருமதி. T. F இராஜநாயகம்,
மகன் R சுரேஸ்குமார்,
மாணவன் R. மகேந்திரன்.

இருப்பிடம்:
12/8 புகையிரத நிலைய வீதி,
சாவகச்சேரி. (2027)



# ★ சமட்ரக் ★

## வெளிநாட்டு வேலை வெற்றிடங்கள்

● சிங்கப்பூர் ● குவைத் ● பெய்றாட் ● அபுதாபி

| பணிப்பெண்கள் | சம்பளம் | வயதெல்லை |
|---|---|---|
| (வீட்டு உதவியாளர்கள்) | 3000 - 3500 ரூபா | 20 - 35 வரை |

### குவைத்

சமையல்காரர்கள் (ஆண் பெண் இருபாலாரும்)
ஆங்கில ஆசிரியைகள் (மொன்ரிசூரிஸ்)
உடுப்புத் தையல்காரர்கள் (பெண்கள்)
உடுப்பு தயாரிப்பாளர்கள் (Dress Makers)

சம்பளம் 3500 - 4200 ரூபா வரை

வயதெல்லை 22 - 35 வரை

### கொங்கொங்

வீட்டு உதவிப்பெண்கள் (ஆங்கில அறிவு அவசியம். ஒரு வார பயிற்சிநெறி அளிக்கப்படும். தேர்வின் பின் 1—12 வாரங்களுள் பிரயாணம் ஒழுங்கு செய்யப்படும்.)

சம்பளம் 9200 ரூபா

வயதெல்லை 22 - 40 வரை

### ABUDHABI U.A.E

| | தேவையானோர் தொகை | சம்பளம் |
|---|---|---|
| U. A. E. சாரதி லைசென்ஸ் உடன் சாரதிகள் | 200 பேர் | 7500/- |
| Electrician 10 வருட அனுபவம் | 25 பேர் | 7500/- |
| Pipe fitters / Plumbers 10 வருட அனுபவம் | 25 பேர் | 7500/- |
| மேசன் (Masons) 10 வருட அனுபவம் | 25 பேர் | 7500/- |
| கனரக வாகன சாரதிகள் Heavy Vehicle Drivers | 50 பேர் | 8100/- |
| தச்சுவேலைகாரர் (Carpenters) | 30 பேர் | 7500/- |
| Auto Mechanics | 30 பேர் | 7500/- |
| Building Painters | 30 பேர் | 7500/- |

வயதெல்லை 18 — 35 வரை

குறிப்பு :

(1) 2 வருட ஒப்பந்தம்.
(2) 2 வருட சேவையின் பின் 8 வார சம்பள லீவும் இலவச திரும்பும் விமான பயணச் சீட்டும்.
(3) சாப்பாடு, தங்குமிட வசதிகள், வைத்திய வசதிகள் அனைத்தும் இலவசம்.

தொடர்பு கொள்ளும் முகவரி :

**சமட்ரக் ரவல் லிமிட்டெட்,**

இல. 262, பிரதான வீதி,

யாழ்ப்பாணம்.

(லைசென்ஸ் இல. 584)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### உதய சங்கற்பம்

எவர்களுடைய அக்கிரமங்கள் மன்னிக்கப் பட்டதோ, எவர்களுடைய பாவங்கள் மூடப் பட்டதோ, அவர்கள் பாக்கியவான்கள்.

— பைபிள்.


# உதயன்

உண்மை - சுதந்திரம் - தூய்மை

இல:-292/2 நாவலர் வீதி, தொலைபேசி 24805
யாழ்ப்பாணம். 22073
20.03.1988 த.பெ.இல:-23


## குதிரைக்கு முன் வண்டியா?

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் புனர் நிர்மாண மற்றும் அபிவிருத்தி வேலைகளைச் செய்வதில் இந்தியா அக்கறை கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

செய்யக் கூடிய புனர் நிர்மாண வேலைகளைக் கண்டறிவதற்காகவும், அதற்கான சாத்தியக் கூறுகளை ஆராய்வதற்காகவும், ஆரம்ப மதிப்பீடுகளைச் செய்வதற்காகவும் ஐவர்குழு ஒன்று இங்கு வந்துள்ளது.

இப்போதைய சூழ்நிலையில் மக்களின் பிரச்சினைகளை ஓரளவுக்கேனும் முன் வைத்துச் செயலற்றும் பிரசைகள் குழுக்களின் பிரதிநிதிகளையும் இந்தியத் தூதுக்குழு சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறது. அந்தப் பேச்சுவார்த்தையின் போது அல்லையார் முன்னணிப் பிரதிநிதிகளும் சமுகம் அளித்திருந்தனர்.

பிரஸ்தாப பேச்சுவார்த்தையின் போது, யாழ் மாவட்டத்தில் செய்யப்பட வேண்டிய புனர்நிர்மாண வேலைகளைப் பற்றிய விவரங்களைத் திரட்டுவதற்கு இந்தியத் தூதுக்குழுவினாப் பம் தெரிவித்ததாக அறிய வந்தது. எந்த வகையான புனர்நிர்மாண வேலைகளைச் செய்ய முடியும் என்பது பற்றியும் தூதுக்குழு அறிய முனைந்ததாம்.

வடக்கு, கிழக்குப் பகுதிகள் கடந்த ஐந்து வருடங்களில் கண்ட அழிவுகள் அனந்தம். அனர்த்தங்கள் மிகப் பல. அவை உருவம் மாறிக் கோலம் இழந்து கூனிக்குறுகி, சோணற் பட்டு நிற்கின்றன. தமிழர்கள் ஆண்டாண்டு காலமாக வாழ்ந்த பகுதிகள் பல, சிதைவுண்டு பாழும் பிரதேசங்களாக, பாலை வனங்களாக, மயான பூமிகளாக மறு உருவம் எடுத்துள்ளன.

அவை நிச்சயம் புனர் நிர்மாணம் செய்யப்பட்டு, புதுப்பொலிவு கொடுக்கப்பட வேண்டியவை. அது விடயத்தில் இந்தியா அக்கறையும் ஆர்வமும் காட்டுவது மகிழ்ச்சிக்கு உரியது.

ஆனால் சுவர் இன்றிச் சித்திரம் தீட்ட முடியுமா? புனர் நிர்மாணம், புதுப்பொலிவு, அபிவிருத்தி என்ற அழகிய சித்திரங்களை ஈழத் தமிழர் தாயகத்தில் தீட்ட வேண்டுமெனின், அங்கு அரசியல் ஸ்திரம் என்ற சுவர் அவசியம்.

அரசியல் ஸ்திரம் என்பது தமிழ்ப் பகுதிகளில் தமிழர் நிர்வாகம் நிலைநிறுத்தப்படுவதிலேயே தங்கி உள்ளது. மற்றவர் தலையீடு இன்றித் தமிழ் மக்கள் தமது பகுதிகளை நிர்வகிக்கவும், வளம்படுத்தவும், சமூக முன்னேற்றத்தை ஏற்படுத்தவும் தமிழர்களின் நிர்வாகம் உருவாக்கப்படுவது மிகமிக அவசியம்.

இந்த நல்ல கருத்தை, உண்மையான நிலைப்பாட்டை பிரசைகள் குழுக்களின் பிரதிநிதிகள் இந்தியக் குழுவிடம் சரியாக எடுத்துரைத்திருக்கிறார்கள்.

தமிழ்ப் பகுதிகளில் அர்த்தபுஷ்டியான அமைதிநிலை பிறந்து, மனநிம்மதி தரக்கூடிய சுமுகநிலை உருவாகாதிருக்கும் வரை, புனர் நிர்மாண வேலைகள் எதையும் செய்து பயனில்லை. அவை விழலுக்கு இறைத்த நீராகி விடும்.

எனவே இந்தியா, புனர்நிர்மாண வேலைகளில் காட்டும் ஆர்வத்தைத் தமிழ்ப் பகுதிகளில் அரசியல் ஸ்திரத்தை — தமிழர் நிர்வாகத்தை உருவாக்குவதில் காட்டவேண்டும்.

புனர்நிர்மாணத்துக்கு முன்னர் தமிழ்ப் பகுதிகளில் அரசியல் அமைதியையும், ஸ்திர நிலையையும் தோற்றுவிக்க வேண்டும். குதிரைக்கு முன்னால் வண்டியைப் பூட்டிப் பயணம் செய்ய முடியுமா?

## கிழக்கு ஜேர்மனியின் உளவு வேலை அம்பலம்

பேர்லின், மார்ச் 19

கிழக்கு ஜேர்மனியில் உள்ள அரசு நிறுவனம் ஒன்றின் உயர் அதிகாரி ஒருவர் மேற்கு ஜேர்மனியில் தஞ்சமடைந்தார் என்று வெள்ளிக் கிழமை அறிவிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து கிழக்கு ஜேர்மனி நடத்தி வரும் உளவு வேலை பற்றிய விவரங்கள் மேற்கு ஜேர்மனி அரசுக்குத் தெரிய வந்துள்ளன.

## எயிட்ஸ் பரவுவதைத் தடுக்க புதியவித திருமணம்!

### டென்மார்க்கில் விவாதம்

கொபன்ஹேகன், மார்ச் 19

தன்னிச்சைச் சேர்க்கையில் ஈடுபட்டுள்ளவர்கள் திருமணஞ் செய்து கொள்வதை சட்டபூர்வமாக அங்கீகரிக்கும் சட்ட மூலம் ஒன்று டென்மார்க் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது.

இப்பிரச்சினைக்குரிய சட்ட மூலம் எயிட்ஸ் நோய் பரவுவதைத் தடுக்க உதவும் என்று அதனை ஆதரிக்கும் எம்.பிக்கள் வாதிடுகின்றனர்.

மூன்றுவது வாசிப்பின் போது இச்சட்டம் பெரும்பான்மை ஆதரவுடன் நிறைவேற்றப்படும் என்று அரசியல் அவதானிகள் கூறுகின்றனர். (ஏ)

# அமெரிக்கப் படைகள் நிக்கரகுவாவுடன் நேரடி மோதல் நடத்தும் அபாயம்

## ஹொண்டுரூஸ் எச்சரிக்கை

மனகுவா, மார்ச் 19

நிக்கரகுவா அரசுப் படைகள் ஊடுருவலைத் தொடருமாயின், அமெரிக்கப்படை நேரடியாக யுத்தத்தில் இறங்கும்.

இப்படி ஹொண்டுரூஸ் ஜனாதிபதி நேற்று அறிவித்தார்.

சுமார் 3,200 வீரர்களைக் கொண்ட அமெரிக்க இராணுவ அணி, ஹொண்டுரூஸ் — நிக்கரகுவா எல்லையில் தற்சமயம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

அதே வேளையில், நிக்கரகுவா — ஹொண்டுரூஸ் யுத்தம் தீவிரமடைந்து வருவது பற்றி ஆராய ஐ.நா. பாதுகாப்புச்சபையின் விசேட கூட்டம் நடைபெறவுள்ளது.

நிக்கரகுவா அரசு செய்து கொண்டமுறைப்பாட்டின் மீது ஐ.நா. பாதுகாப்புச்சபை கூட விருப்பதாக வாஷிங்டனில் அறிவிக்கப்பட்டது.

இதனிடையில் அமெரிக்கப்படைகள் ஹொண்டுரூஸ் எல்லைப் புறத்தில் தயார் நிலையில் உள்ளன.

எல்லைப் புறத்தில் உள்ள நிக்கரகுவா தளம் ஒன்றின் மீது ஹொண்டுரூஸ் விமானங்கள் குண்டுகளைப் பொழிந்தன. சேத விவரங்கள் அறிவிக்கப்படவில்லை.

நிக்கரகுவா அரசுப் படைகள், ஹொண்டுரூஸ் நாட்டினுள் நான்கு கிலோ மீட்டர் ஊடுருவல் செய்திருப்பதாக ஹொண்டுரூஸ் அரசு குற்றஞ்சாட்டியுள்ளது.

இக் குற்றச்சாட்டை நிக்கரகுவா அரசு மறுத்துள்ளது.

அமெரிக்க உதவியுடன் நிக்கரகுவாவை ஆக்கிரமிக்க ஹொண்டுரூஸ் எத்தனிக்கிறது என்றும் நிக்கரகுவா அரசு அறிவித்துள்ளது. (எ)

## அரசியல் கைதிகள் விடுதலையாகாதது ஏன்?

புதுடில்லி, மார்ச் 19

தமிழ் அரசியல் கைதிகள் சிலரைத் தொடர்ந்து தடுப்புக் காவலில் வைத்திருக்கவேண்டிய காரணங்கள் பற்றி அமைச்சர் காமினி திஸநாயக்கா, இந்திய அரசுக்குத் தெரியப்படுத்தினார்.

பிரதமர் ராஜீவ்காந்தியுடன் நடந்த சந்திப்பின் போது அமைச்சர் இதுபற்றிய விவரங்களை வெளியிட்டார். (இ-எ)

## தமிழ் நாட்டில் கூட்டுறவுச் சங்கத் தேர்தல்

சென்னை, மார்ச் 19

தமிழ் நாட்டில் கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்கள் விரைவில் நடத்தப்படும்.

இதற்கான உத்தியோகபூர்வ அறிவிப்பு, சித்திரைப் புத்தாண்டில் வெளியிடப்படும் என்று தமிழ் நாடு ஆளுநர் பி.ஸி. அலெக்ஸாண்டர் நேற்றுத் தெரிவித்தார்.

அறிவிப்பு வெளியிடப்பட்ட தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்குள் தேர்தல் நடத்தப்படும் என்றும் ஆளுநர் தெரிவித்தார்.

1975 க்குப் பின்னர் கூட்டுறவுச் சங்கத் தேர்தல் நடத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

# பனாமா தளபதி நொறியகோ வெளிநாட்டில் தஞ்சம் கோரலாம்?

## அரசியல் நெருக்கடிக்கு தீர்வுகாண முயற்சி

வாஷிங்டன், மார்ச் 19

பனாமாவின் அரசியல் நெருக்கடியைத் தீர்க்கும் முயற்சியாக சமரசத் திட்டம் ஒன்று எந்த நேரத்திலும் அறிவிக்கப்படலாம் என்று பி.பி.சி அறிவித்தது.

இந்த உத்தேசத்தின்படி, பனாமாவின் இராணுவத்தளபதி ஜெனரல் நொரியாகோ ஸ்பெயின் அல்லது பிரான்ஸில் அடைக்கலம் கோரலாம் என்றும் பி.பி.சி மேலும் தெரிவித்தது.

அமெரிக்க ராஜாங்க அமைச்சு வட்டாரங்களை ஆதாரங்காட்டி இதனை பி.பி.சி. தெரிவித்தது.

இன்னும் சில தினங்களில் இவை பற்றி தெரிய வரும். ஸ்பெயின், அல்லது பிரான்ஸில் அடைக்கலம் கோரும் ஜெனரல் நொரியாகோ நிரந்தரமாகவே அரசியல் தஞ்சம் கோருவாரா அல்லது தற்காலிகமாகவே கோருவாரா என்பது தெரியவில்லை என்று அறிவிக்கப்படுகிறது.

இதனிடையில், பனாமா நாட்டில் அவசரகாலச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது.

இராணுவத் தளபதி ஜெனரல் நொரியாகோ நாட்டின் சக்தி மிகுந்த மனிதராக மாறியதைத் தொடர்ந்து, பனாமாவில் நிதி நெருக்கடி தோன்றியது.

அமெரிக்காவின் பொருளாதாரத் தடை காரணமாக அரசு ஊழியர்களுக்குச் சம்பள உயர்வு கூட வழங்க முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது.

### வெளி உலகில்

# ஆப்கானில் இருந்து சோவியத் துருப்புக்கள் விலக்கப்படுவது நிச்சயம்

## மாஸ்கோ அறிவிப்பு

ஆப்கானிஸ்தானில் இருந்து சோவியத் துருப்புக்கள் விலக்கப்படும் என்ற கொள்கையில் மாற்றம் எதுவுமில்லை.

மாஸ்கோவில் பாதுகாப்பு அமைச்சு உயர் அதிகாரி ஒருவர் இத்தகவலைத் தெரிவித்தார்.

ஆப்கனில் இருந்து சோவியத் துருப்புக்கள் விலக்கிக் கொள்ளப்படுவது பற்றி சென்ற 15 ஆம் திகதி பாகிஸ்தானும் ஆப்கானிஸ்தானும் உடன்பாடு காணத் தவறிவிட்டன.

அது குறித்துக் கருத்துத் தெரிவிக்கையிலேயே சோவியத் அதிகாரி இதனை வெளியிட்டார்.

துருப்புக்களை ஆப்கனில் இருந்து விலக்கிக் கொள்வது என்பதில் சோவியத் அரசு இன்னும் உறுதியாக உள்ளது. பாகிஸ்தானும் ஆப்கனிஸ்தானும் உடன்பாடு கண்டவுடன் துருப்புக்கள் வாபஸாகும் — சோவியத் அதிகாரி இப்படி மேலும் சொன்னார். (எ)

## யூகோ விஜயம்

மாஸ்கோ, மார்ச் 19

சோவியத் தலைவர் மிக்கெயில் கோர்ப்பச்சேவ் ஐந்து நாள் விஜயத்தை முடித்துக் கொண்டு யூகோஸ்லவேகியவில் இருந்துநாடுதிரும்பினார். (எ)

# தேரடியில் புகழ் பெற்ற செல்லப்பா சுவாமிகள்

இலங்கை ஒரு சிவ பூமி என்பது திருமூலர் வாக்கு. சிவனுக்குரிய ஈஸ்வரங்கள் மலிந்த நாடு. சித்தர்கள் உலாவிய பெருமையுடைய நாடு. சித்தத்தை சிவன் பால் வைத்த சித்தர்களின் பாரம்பரியம் பெரியது. முத்தியானந்தர் எனும் கடையிற் சுவாமிகள் முதல் யோகர் சுவாமிகள் வரை யோகியர், ஞானிகள் துறவியர்கள் யாழ்ப்பாணமெங்கும் தங்கள் ஞானச் சுவடுகளை விட்டுப் போயிருக்கிறார்கள்.

செந்தமிழும், சைவ நெறியும் தலையெடுத்த நல்லூரின் பழைய அரசிருக்கைக்கு அருகே நல்லூர்க் கந்தன் ஆலயத்தைச் சுற்றி நாற்றிசைகளிலும் காவற் கோயில்கள் அமைந்திருந்தன. நாள்தோறும் வளர்ந்து வந்த நல்லூரின் சிறப்பு வனப்பு புகழ் பெற்று ஓங்கியது. நல்லூர்த் தேரடிக்குத் தனிச் சிறப்பு உண்டானது.

நல்லூரானின் தேரடிக்குத் தென்திசையில் வயல் நிலங்கள் இருந்தன. பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த வல்லிபுரம் என்பவர் நல்லூரைச் சேர்ந்த பொன்னம்மா என்பவரை மணந்து வயலோரத்தில் வீடமைத்து வேளாண்மை செய்து நல்ல முறையில் வாழ்ந்து வந்தார்.

அவர்களுக்கு ஆண்கள் இருவரும் பெண்கள் இருவருமாக செல்வங்கள் நால்வர் பிறந்தனர். ஆண்களுள் ஒருவரின் பெயர் செல்லப்பா, பெண்களில் ஒருவரின் பெயர் செல்லாச்சி.

செல்லப்பா இளமையில் சுந்தர் மடத்துச் சைவப் பிரகாச வித்தியாசாலையில் ஆரம்பக் கல்வி கற்று பின் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்குச் சென்று ஆங்கிலம் கற்றார். கல்வி கற்ற பின் உண்டான சூழ்நிலை காரணமாகப் படிப்பை நிறுத்தி உத்தியோகம் பார்க்க வேண்டியவரானார். யாழ்ப்பாணக் கச்சேரியில் ஆராய்ச்சி உத்தியோகம் பெற்று வெகு திறமையாகக் கடமையாற்றினார். வெள்ளைக்காரர் பாராட்ட மதிப்புடன் உத்தியோகம் வகித்த செல்லப்பரின் போக்கு எல்லோருக்கும் திகைப்பை உண்டாக்கியது.

அரச உத்தியோகத்தை வெறுத்து அவர் உள்ளம் ஞானத்தை நாடியது. உள்ளே ஊறி வந்த ஞானப் பெருக்கு வெளியே வழியத் தொடங்கிய போது அவரின் போக்கு பித்தர் போலவும், குழந்தை போலவும் இருந்தது. கச்சேரித் தொடர்பைத் துண்டித்து கொட்டடியின் மூலையில் குந்தியிருக்கத் தொடங்கினார்.

அக்காலத்தில் கொழும்புத்துறையில் வாழ்ந்து மஸ்கேலியாவில் வியாபாரஞ் செய்த அம்பலவாணர் என்பவர் மாவிட்டபுரத்தில் சின்னாச்சி அம்மையாரைத் திருமணஞ் செய்து 1871 ஆம் ஆண்டு பெற்ற மைந்தன் சதாசிவம். சிலகாலம் செல்வ அம்பலவாணர் இறந்ததும், அவரின் தம்பியார் சின்னையா என்பவர் சதாசிவத்தை சென்பற்றிக்ஸ் கல்லூரியில் சேர்த்து நல்ல முறையில் கல்வி கற்பித்து வந்தார்.

சின்னையா கிறிஸ்தவ சமய சூழலில் யோசேவ் என்ற பெயர் பெற்று வாழ்ந்தவர். அந்த வகையில் சதாசிவத்துக்கும் 'யோகநாதன்' எனும் பெயர் வழங்கப்பட்டது.

யோகநாதன் பயின்ற காலத்திலே விவேகியாய்த் தாம் பயின்றவற்றை ஏனைய மாணாக்கர்களுக்கு விளக்கிக் கூறுவார்.

தான் சுயமாக உழைத்து வாழ வேண்டுமென நினைத்து படிப்பை நிறுத்தி விட்டு, கிளிநொச்சியில் இரணைமடுக் குளம் திருத்த வேலைகள் பிரவுண் என்னும் வெள்ளைக்காரர் தலைமையில் நடைபெற்ற காலத்தில் பண்டக சாலையில் வேலை கிடைக்கப் பெற்றார்.

உத்தியோகத்தில் ஈடுபட்டிருந்த யோகநாதனின் பார்வை காந்த சக்தி வாய்ந்ததாக அமைந்திருந்தது.

கொழும்புத்துறை திருஞான சம்பந்தர், இராமலிங்கம் முதலியோர் செல்லப்பாச் சுவாமிகளின் பெருமையைக் கூறக்கேட்ட யோகநாதன் அவர்களோடு சேர்ந்து அவரைத் தரிசிப்பதற்காக நல்லூர் சென்றார். குருநாதரைக் கண்ட யோகநாதனின் மனோநிலை எப்படியாயிருந்தது என்பதை அவரின் நற்சிந்தனைப் பாடலில் விளக்கியுள்ளார்.

'ஆசானைக் கண்டேன் அருந்தவர் வாழ் நல்லூரில்
பேசாதன வெல்லாம் பேசினான்-
கூசாமல் நின்றேன் நீ
யாரடா என்றே
அட்டிஞன் அன்றேயான் பெற்றேனருள்'

இப்படியாக தன் குருநாதரின் அருளைப் பெற்ற யோகநாதன் அவரின் சீடராக அமைந்து அவரின் அடிச்சுவட்டைப் பின்பற்றி வாழ்ந்து காட்டினார்.

செல்லப்பா சுவாமிகளின் அருட்பார்வையே யோகநாதன் பிற்காலத்தில் துறவு நிலை எய்தவும் தூண்டியது.

இப்படியான யோகிகளின் நல்வழியைப் பின்பற்றி நாமும் அவர்களது வழி நடப்போமாக.

செந்தில் தமரன் சந்நசாமி

## அஞ்சலிக் கூட்டம்

யாழ். தொழில் நுட்பக் கல்லூரியில் பணியாற்றி கடந்தகாலச் சம்பவங்களினால் காலமாகிய வணிகத் துறைத் தலைவர் திரு. அ. இரத்தினம், பொறியியல் துறைத் தலைவர் பொ. சிவயோகநாதன், சிரேஷ்ட போதனாசிரியர் சி. ஓங்காரவடிவேல் சதிர்காமமுதலியார் பகுதிநேர விரிவுரையாளர் திரு மு.க. பத்மநாதன், எழுதுவினைஞர் இ. பரமேஸ்வரன் ஆகியோருக்கு அஞ்சலி செலுத்துமுகமாக இன்று காலை 9 மணிக்கு பகுதிநேர வணிக மாணவர்மன்றத் தலைவர் செ. ஞானசேகரம் தலைமையில் அஞ்சலிக் கூட்டம் நடைபெறும். (இ)

### பொய்யாமொழி



குறள்:

மடிமை குடிமைக்கண் தங்கின்தன் ஒன்னார்க்கு
அடிமை புகுத்தி விடும்.

பொருள்:

சோம்பல் நல்ல குடியிற் பிறந்தவனிடம் ... அவனை அவனுடைய பகைவர்க்கு அடிமையாகுமாறு செய்து விடும்.

### சமய நிகழ்ச்சிகளில்

## சங்கரத்தை பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில்

யாழ்ப்பாணம், மார்ச்20

சங்கரத்தை பத்திரகாளி அம்பாள் ஆலயத்தின் பங்குனி மாத மஹோற்சவம் எதிர்வரும் 23ஆம் திகதி கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகின்றது.

அடுத்த மாதம் முதலாம் திகதி தேர்த்திருவிழா இடம்பெறும்.

இந்த ஆலயம் அண்மையில் புனரமைக்கப்பட்டு மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. (இ-எ)

## மருதடி விநாயகர் மகோற்சவம்

யாழ்ப்பாணம், மார்ச் 20

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 28 ஆம்திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

ஏப்ரல் மாதம் 13 ஆம் திகதி, தமிழ் வருடப் பிறப்ன்று, தேர்த்திருவிழாவும். 14 ஆம்திகதி தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும். (இ-7)

## மூளாய் சித்திவிநாயகர் ஆலயத்தில்

யாழ்ப்பாணம் மார்ச்20

மூளாய் சித்திவிநாயகர் ஆலயத்தில் சதுர்த்தித் திருவிழா நாளை திங்கள் பிற்பகல் 4 மணிக்கு நடைபெறும். சிறப்பு நிகழ்ச்சியாக பக்கவாத்தியங்கள் சகிதம் பண் இசையரங்கும் நிகழும். (இ)

## உடுவில் கந்தசாமி கோயில் கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், மார்ச்20

உடுவில் மல்வம் ஸ்ரீ கந்தசுவாமி, ஸ்ரீ ஞானவைரவ மூர்த்திகளுக்கு எதிர்வரும் புதன்கிழமை புனராவர்த்தன மஹா கும்பாபிஷேகம் நடைபெறும்.

கடந்த வெள்ளிக்கிழமை முதல் இதற்கான கிரியைகள் நடைபெற்று வருகின்றன. (இ-க)

## கும்பாபிஷேகம்

இணுவில் அருள் மிகு கந்தசுவாமி கோவில் பாலஸ்தான கும்பாபிஷேகம் இன்று 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெறும்.

மகா கும்பாபிஷேகம் நடைபெற்று 12 ஆண்டுகள் பூர்த்தியடைவதாலும் அண்மைக் கால அனர்த்தங்களால் கடந்த ஆண்டு மகோற்சவம் நித்திய பூசைகள் தடைபட்டதாலும் பாலஸ்தாபனம் செய்து மகா கும்பாபிஷேகம் நடத்தப்படுகின்றது.

## ஆனைக்கோட்டை அம்பாள் ஆலயம் கும்பாபிஷேகம்

ஆனைக்கோட்டை அருள்மிகு ஸ்ரீ வீரமாகாளி அம்பாள் ஆலய மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் புதன்கிழமை காலை நடைபெறுகின்றது.

இதற்கு முன்னோடியாக செவ்வாய்க்கிழமை அதிகாலையில் இருந்து எண்ணெய் காப்பு இடம்பெறும். (இ-எ)

## மகோற்சவம்

நல்லூர் ஸ்ரீ சட்டநாதர் ஆலய வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் புதன்கிழமை நண்பகல் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

இம்மாதம் 31 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் அடுத்த நாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (இ-எ)

## செல்வச்சந்நிதி கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், மார்ச்20

தொண்டமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய மகா கும்பாபிஷேகம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெறும்.

இன்றில் இருந்து வழமையான பூசைகள் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

1986 ஆம் ஆண்டு ஆரம்பத்தில் இருந்து இந்த ஆலயம் பூட்டப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேட்டிங் சூட்டிங்ஸ்
★ குழந்தைகளுக்கான ஆடைகள்
★ சகல விதமான றெடிமேட் ஆடைகளுக்கும்
யாழ்நகரில்
**மயூரா சென்ரர்**
13 B, நவீனசந்தை, யாழ்நகர்.

# உதயன்

20 - 03 - 1988 ஞாயிற்றுக்கிழமை

திருமண வைபவங்களுக்கேற்ற
★ மணிப்புரி
★ பெனரஸ்
★ காஞ்சிபுரம்
சேலைகளைப் பெற்றுக் கொள்ள
**மயூரா சென்ரர்**
13 B, நவீன சந்தை, யாழ்நகர்.

உ
சிவமயம்

## திருமண அழைப்பிதழ்

மணமகன்: திருநிறை செல்வன்
பொன்னம்பலம் தர்மராசா
உரிமையாளர்: P.S.M. Stores (பொன சிவான்) விஸ்வமடு.

மணமகள்: திருநிறை செல்வி
சு. கந்தையா தனலக்ஷ்மி

காலம்; பிரபவ வருடம் பங்குனித் திங்கள் 10ம் திகதி (23 - 03 - 88)

மணவாளக்கோலம்: காலை 7.30 மணி மணமகன் இல்லம்-புதுரோட் ஆறுகாம்மடம் ஆனைக்கோட்டை.

திருமாங்கல்யம் தரித்தல்: காலை 11 - 27 முதல் 12 - 16 வரை மணமகள் இல்லம், புளியங்கூடல், ஊர்காவற்றுறை.

உறவினர்கள், நண்பர்கள் குடும்ப சகிதம் சமுகமளித்து திருமண வைபவத்தைச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
திருமதி சு. கந்தையா செல்லம்மா
மணமகள் தாயார்
புளியங்கூடல்.
ஊர்காவற்றுறை.

இங்ஙனம்
திருமதி தங்கம்மா பொன்னம்பலம்
மணமகனின் தாயார்
திரு பொன்னம்பலம் சிவராசா
குடும்பத்தினர்
விஸ்வமடு.

[2097]

### ★ அக்குபஞ்சர் விரிவுரை ★

வட இலங்கை அக்குபஞ்சர் சங்கம் நடாத்தும் வைத்தியர்களுக்கான விரிவுரை செய்முறைப் பயிற்சி 17 - 04 - 1988இல் ஆரம்பம் விண்ணப்ப முடிவுத் திகதி 3 - 4 - 88 விண்ணப்பங்களை நேரில் பெற்றுக் கொள்ளவும்.

### ★ அக்குபஞ்சர் வைத்தியசாலை ★

ஆஸ்மா (தொய்வு நோய், மற்றும் சகல நாட்பட்ட நோய்களுக்கும் அக்குபஞ்சர் வைத்திய நிபுணர் மூலம் சிகிச்சை அளிக்கப்படும். முன் கூட்டியே நேரில் பதிவு செய்து கொள்ளவும். நேரம் காலை 9 மணி முதல் 12 மணி வரை (ஞாயிற்றுக்கிழமைகளில் மட்டும்.)

### ★ மீளாய்வு வகுப்பு ★

வடஇலங்கை ஹோமியோபதி சங்க மீளாய்வு வகுப்பு
13 - 03 - 1988 முதல் ஆரம்பமாகியுள்ளது.

விபரங்கள் நேரில் பெற்றுக் கொள்ளவும்.
5 நாவலர் வீதி, ஐந்து சந்தி, யாழ்ப்பாணம்.
(2090)

## தேவை

சிநோர் அபிவிருத்தி நிறுவனத்துக்கு பின்வரும் பலகைகள் உடன் தேவைப்படுகின்றன. விநியோகிக்க விரும்புவோர், அதன் கூறு விலையைகீழ்க்கண்ட விலாசத்துக்கு 25 03.88 ஆம் திகதிக்கு முன் அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

### விபரம்

1. வாகை அல்லது யாவறணை=
   2" X 8" X 6½' = 60 பலகைகள்
2. வாகை அல்லது நாவல்=
   1" X 9" X 4½' = 60 பலகைகள்
3. வாகை அல்லது நாவல்=
   ½" X 6" X 3½' = 60 பலகைகள்
4. வாகை அல்லது நாவல்=
   1" X 2½" X 6' = 60 பலகைகள்

விபரங்களுக்கு:
பிரதிப் பொது முகாமையாளர்,
சிநோர் அபிவிருத்தி நிறுவனம்,
குருநகர்.

எமது புதிய வெளியீடுகள்

1. சிவகுமார்- சரண்ராஜ் ராதிகா
"பூவும் புயலும்"
2. ராமராஜன் - ராதாரவி - ரேகா
"ராசாவே உன்னை நம்பி"

**குணம் வீடியோ சென்ரர்**
42, மணிக் கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி. 23665

சுன்னாகம் பல. நோ. கூ. சங்கம்
(வரையறுக்கப்பட்டது) சுன்னாகம்

## அறிவித்தல்

சுன்னாகம் பல. நோ. கூ. சங்கத்தில் 3539 வெற்றுச் சாக்குகள் கேள்விப் பத்திர மூலம் விற்பனைக்கிருக்கின்றன.

வெற்றுச் சாக்குகளுக்கு மீளளிப்பு வைப்புப் பணமாக ரூபா 250 ஐ சங்கத்தில் செலுத்தி கேள்விப்பத்திரங்களைச் சங்க வேலை நாட்களில் பெற்றுக் கொள்ளலாம்.

26 3 88 சனிக்கிழமை நண்பகல் 12 00 மணிவரையும் கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்

பொதுமுகாமையாளர்

சுன்னாகம் பல. நோ. கூ. சங்கம்,
சுன்னாகம்.
17. 03. 88

## இன்று கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச்20

யாழ் வைத்தீஸ்வரா வித்தியாலய மண்டபத்தில் இன்று காலை 10 மணிக்கு ஆலோசனைக் கூட்டம் நடைபெறும்.

தமிழ் பேசும் மக்களை எதிர் நோக்கியிருக்கும் பிரச்சினைகளையும் அவர்கள் அனுபவித்து வரும் சொல்லொணாத் துன்பங்களையும் நீக்கும் வழிவகைகள் பற்றி இதில் ஆராயப் படும்.

கடந்த 15 ஆம் திகதி நடைபெற இருந்து பின் ஒத்தி வைக்கப்பட்ட ஆலோசனைக் கூட்டமே இன்று நடைபெறுகிறது. (இ-க)

## கொழும்பில்---

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

ஒன்று வெடித்ததில் இரண்டுபேர் உயிரிழந்தனர்.

சுமித்திபுர என்னும் இடத்தில் உள்ள வீடு ஒன்றினுள் வைத்து குண்டு தயாரித்துக்கொண்டிருந்த சமயம் வெடிச்சம்பவம் இடம்பெற்றதாகத் தெரியவந்தது.

இருவர்படுகாயமடைந்தனர் தனபால, பிரேமரத்தின ஆகியோரே உயிரிழந்தவர்கள் ஆவர். (இ எ)

## ஸ்ரீலங்கா . . .

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

படை, விசேட அதிரடிப் பொலீஸ்படை இப்பணியில் ஈடுபடுத்தப்பட மாட்டாது

ஜனாதிபதித் தேர்தல் குறிப்பிட்டபடி இந்த ஆண்டு இறுதியினுள் நடத்தப்படும அது ஒத்தி வைக்கப்படும் என்று கூறப்படுவதில் உண்மை கிடையாது.

இப்படி அமைச்சர் காமினி திஸநாயக்கா தெரிவித்தார். (இ-எ

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## இலங்கை
# பதவி வெற்றிடம்

தொழில் நுட்பவியலாளர் தரம் 11 பிரிவு 'அ" பதவிக்கான விண்ணப்பங்கள் 1988 ஏப்ரல் 08ம் திகதி வரை என்னால் பெற்றுக் கொள்ளப்படும்.

பதவி: தொழில் நுட்பவியலாளர் தரம் 11 பிரிவு "அ"

சம்பள அளவுத்திட்டம்; ரூபா 1, 100/ -3x30 -1, 190/1, 270 - 6x40-1, 510/1, 590 -9x40 - 1, 950/ மாதமொன்றுக்கு (50/- ரூபா)

தகைமைகள்:

(அ) சிறப்புத் தேர்ச்சி பெற்ற உரிய துறையில் தொழில் நுட்பவியலில் தேசிய டிப்ளோமா அல்லது அதற்குச் சமனான தகைமை

அல்லது

(ஆ) அங்கீகரிக்கப் பெற்ற நிறுவனமொன்றில் தொழில் நுட்பவியலாளராக பத்தாண்டுகளுக்குப் பொருத்தமான அனுபவம்.

குறிப்பு: மருத்துவ ஆய்வுகூட தொழில் நுட்பவியலாளர் தகைமைகளை உடையவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்

வயது: 40 ஆண்டுகளுக்கு மேற்படலாகாது.

தெரிவு: செய்முறைப்பரீட்சை மூலமும் நேர்முகப்பரீட்சை மூலமும் நடைபெறும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்டசபைகளின் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை அந் நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் அனுப்புதல் வேண்டும்.

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

1988 மார்ச் 15 ஆம் திகதி

## ஊழியர் - - - -

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

லுக்கு வரும்.

ஊழியர் விரும்பினால் சேமலாபத் திட்டத்தின் கீழ் செலுத்தப்பட்ட பணத்தை பென்ஷன் திட்டத்துடன் சேர்த்து கூடுதல் பென்ஷன் தொகையை மாதா மாதம் பெற்றுக் கொள்ளவும் முடியும்.

ஊழியர் இறந்தால் அவரின் மனைவி, பிள்ளைகள், ஆகியோருக்கும் திருமணமாகாத ஊழியராக இருப்பின் பெற்றோர்களுக்கும் இப் பென்ஷன் கிடைக்கும்.

தனியார், தோட்டத்துறை மற்றும் அரசு, கூட்டுத்தாபனங்களின் ஊழியர்கள் அனைவரும் புதிய பென்ஷன் திட்டத்தின் கீழ் கொண்டு வரப்படுவர். (இ-எ

**GCE (OL) MARCH 1988**
**Jaffna District Practise Exam**
**TIME TABLE**
மாற்றப்பட்டுள்ளது

| | | | |
|---|---|---|---|
| 22 03-88 | 11 30-12 30<br>1.00-4 00 | ஆங்கிலம்<br>" | i<br>ii |
| 23 03-88 | 11 30-12 30<br>1.00-4.00 | சமூகக்கல்வி<br>" | i<br>ii |
| 24-03-88 | 11 30-12 30<br>1 00-4 00 | கணிதம்<br>" | i<br>ii |
| 25-03-88 | 11.30-12.30<br>1.00-4.00 | விஞ்ஞானம்<br>" | i<br>ii |

முக்கிய குறிப்பு:- தமிழ் மொழி பரீட்சைக்கு தோற்றாத மாணவர்கள் எக்காரணம் கொண்டும் மற்றைய பரீட்சைகளுக்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

**விக்னு**
**டியூசன் சென்ரர்**
52, ஸ்ரான்லி றேட். யாழ்ப்பாணம்.

## 45ஆம் நாள் நினைவு அஞ்சலி

அமரர் நாகமுத்தி நடராசா
[ முன்னாள் கூட்டுறவுப் பரிசோதகர் ]

மலர்வு: 19 - 10 - 1927
உதிர்வு: 4 - 2 - 1988

புன் சிரிப்புச்சித்தி, புகழோடு வாழ்ந்து எமது நெஞ்சங்களை நெகிழ வைத்து எம்மையெல்லாம் ஆருத்துயரில் மூழ்கடித்து மீளாத் துயில் கொண்ட அன்புச் செல்வமே! நாற்பத்தைந்து நாள் சுழிந்தாலும் உங்கள் நினைவு பசுமரத்தாணி போல் நெஞ்சினில் பதிந்திருக்கும் மங்காத ஒளியாய் என்றும் வாழ என இறைவனை இறைஞ்சுகின்றோம்.

உமது பிரிவால் துயருறும்.
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேத்தி, சகோதரம்.

174/6 கோவில் வீதி,
யாழ்ப்பாணம். (2085)

## நீத்தார் பட்டியல்

### நாகலிங்கம் தாமோதரம்பிள்ளை

நாகலிங்கம் தாமோதரம்பிள்ளை கோலாலம்பூரில் 13- 03- 88ல் காலமானார் இவர் முன்னைள் கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் பயிற்சி பெற்ற ஆசிரியரும் முன்னாள் மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலை ஆசிரியரும், முன்னாள் சிறம்பன் மலேசியா விவேகானந்த பாடசாலை அதிபரும் இளைப்பாறிய தகவல் இலாகா கோலாலம்பூர் (Information Dept K. L) ஆவார் இவர் மூளாயைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் காலம் சென்ற நாகலிங்க உபாத்தியாரின் அன்பு மகனும் கனகத்தின் அன்புக்கணவரும் திருமதி லோகாம்பிகை மகேசன் பெற்றுலிங்ஜெயா (கோலாலம்பூர்), ஏரம்பமூர்த்தி ஆயிலடி பன்னாலை, திருமதி பரமேஸ்வரி சிவானந்தன் பெற்றுலிங்ஜெயா (கோலாலம்பூர்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காமாட்சிப்பிள்ளையின் மைத்துனரும், விஜயரூபி, றமேஸ் ஆகியோரின் அன்புப் பெரியப்பாவுமாவர்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆயிலடி, பன்னாலை. 1996
தகவல்: ஏரம்பமூர்த்தி

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2.இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 20-03-1988 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது Printed and Published by NewUthayan Publications (Pvt) Ltd. 292/2 NavalarRoad, Jaffna on Sunday 20th March 1988.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org